Book 5

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

## நயவஞ்சகர்களின் அடையாளம்

★ அதன்மீது பத்தொன்பது இருக்கின்றது.

★ எவர்களுடைய இருதயங்களில் நோய் (நயவஞ்சகம்) இருக்கிறதோ அவர்களும் நிராகரிப்பாளர்களும், இறைவன் இந்த (பத்தொன்பது எனும் எண்ணிக்கையின்) உதாரணத்தைக் கொண்டு என்ன நாடுகிறார் என்று கேட்பதற்காகவுமே நாம் இவ்வாறு ஆக்கினோம்.

அல்குர்ஆன் (74:30, 31)

★ அவர்களுக்கு இறைவனிடமிருந்து புதிய நினைவூட்டல் வரும் போது, அவர்கள் விளையாடியவர்களாக அதை செவி மடுக்கிறார்களேயன்றி வேறில்லை.

அல்குர்ஆன் (21;2)



ஜனவரி
2000
January

PUTHIYA NINAIVOOTAL

TAMIL MONTHLY

# The Simple Facts

Like the Quran itself, the Quran's mathematical coding ranges from the very simple, to the very complex. The Simple Facts are those observations that can be ascertained without using any tools. The complex facts require the assistance of a calculator or a computer. The following facts do not require any tools to be verified, but please remember they all refer to the original Arabic text:

1. The first verse (1:1), known as "Basmalah," consists of............19 letters.
2. The Quran consists of 114 suras, which is.. ...........19 x 6.
3. The total number of verses in the Quran is 6346, or .................19 x 334.
   [6234 numbered verses & 112 un-numbered verses
   (Basmalahs) 6234 + 112 = 6346] Note that 6+3+4+6= .......19.
4. The Basmalah occurs 114 times, despite its conspicuous
   absence from Sura 9 (it occurs twice in Sura 27) & 114 = .......19 x 6.
5. From the missing Basmalah of Sura 9 to the extra
   Basmalah of Sura 27, there are precisely .. ..................19 suras.
6. It follows that the total of the sura numbers
   from 9 to 27 (9+10+11+12+ ... + 26 +27) is 342, or ...............19 x 18.
7. This total (342) also equals the number of words
   between the two Basmalahs of Sura 27, and 342 = .............. 19 x 18.
8. The famous first revelation (96:1-5) consists of....... ..........19 words.
9. This 19-worded first revelation consists of 76 letters.................19 x 4.
10. Sura 96, first in the chronological sequence, consists of ...........19 verses.
11. This first chronological sura is placed atop the last.. .............. ...19 suras.
12. Sura 96 consists of 304 Arabic letters, and 304 equals ............. 19 x 16.
13. The last revelation (Sura 110) consists of..
    19 words.
14. The first verse of the last revelation (110:1) consists of ............19 letters.
15. 14 different Arabic letters, form 14 different sets of
    "Quranic Initials" (such as A.L.M. of 2:1), and prefix
    29 suras. These numbers add up to 14+14+29= 57 = ....... .19 x 3.
16. The total of the 29 sura numbers where the Quranic
    Initials occur is 2+3+7+ ... + 50+68 = 822, and 822+14 (14 sets of initials)
    equals 836, or. 19 x 44.
17. Between the first initialed sura (Sura 2) and the last initialed sura (Sura 68)
    there are 38 un-initialed suras ............ 19 x 2.
18. Between the first and last initialed sura there are.............19 sets of
    alternating"initialed" and "uninitialed" suras.
19. The Quran mentions 30 different numbers: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19,
    20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2000, 3000, 5000, 50,000, &
    100,000. The sum of these numbers is 162146, which equals..........19x8534.

*This is a condensed summary of the Simple Facts.*

Purchase Quran at low cost through Amozon & Flipkart,
Download Quran PDF (In English, Tamil & Hindi),
Donwload Submission Application for mobile,
Quran Audio (In English, Tamil & Urdu),
Dr Rashad's Video in English & Tamil (Translated),
Dr Rashad's Quran Studies Audio,
Masjid India - Friday Jummah sermons,
Masjid India - online Quran studies audio,
Quran Hadith and Islam books (In English, Tamil, Urdu),
Puthiya Ninaivootal Submission monthly magazine.

www.kadavulmattum.org

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி

செய்தி 1

ஜனவரி 2000
நினைவு 5

குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.

ஆசிரியர்

C.S. ரஃபியுதீன்

துனை ஆசிரியர்கள்:

N.A. அஹமது ஹுஃசேன்

K. முஹமது ஷரீப் மஜாஹிரி

தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்

## இதழின் உள்ளே

★ குர்ஆன் வழியில் நம் தொடர்பு தொழுகை
★ காதியானி மதத்தவரைப் புரிந்து கொள்ளுங்கள்
★ 19க்கு ஆலிம்களின் அங்கீகாரமும் பாராட்டும்
★ இறைவனின் முத்திரை - 19
★ சாத்தான் ஒரு மாபெரும் மனோவசியக்காரன்
★ ஹதீஸ்களின் உண்மை நிலை
★ வெற்றிக்கு வழி
★ கேள்வி பதில்கள்

# கண்டனம்

## புனித ரமலான் மாதத்தில்
## கொலைவெறித் தாக்குதல்

நமது இதழின் ஆசிரியர் சி.எஸ். ரபியுத்தீனையும், உறவினர் ஜாபர் இமாமையும் மண்ணடி கிருஷ்ணன் கோவில் தெருவில், அவரது வீட்டிற்குள்ளேயே குர் ஆனுக்கு எதிரான முஸ்லீம் இயக்கத்தினர் ஆயுதங்களால் தாக்கிப் படுகாயப்படுத்தி உள்ளனர்.

எத்தனை பேரை தாக்கினாலும், கொலை செய்தாலும் அல்லாஹ்வை மட்டும் தனித்தவராக வணங்குவோர் அழிந்து விடப்போவதில்லை. குர்ஆனுக்கு எதிராக தங்களிடம், கருத்துக்களும் ஆதாரங்களும் இல்லாத நிலையில் சில வெறியர்கள் தாக்குதல்களையும் கொலை முயற்சியையும் மேற்கொள்கின்றனர். எவர் நேரான வழியில் இருக்கின்றார். எவர் வழிகேட்டில் இருக்கின்றார். என்றறிந்து இறைவன் தீர்ப்பு வழங்குவார். அல்லவா!

நடுநிலையாளர்களே! இறையச்சமுடையவர்களே! சிந்தியுங்கள். சீர்தூக்கிப் பாருங்கள். குர்ஆனுக்கு எதிரான வர்களால் அலி, உமர், உதுமான் போன்ற கலீபாக்களும் நபியின் பேரர்களான ஹசன் ஹுசேனும் கொல்லப்பட்டனர். மேலும் இறை விரோதிகளால் பல நபிமார்கள், தூதர்கள் கொலை செய்யப்பட்டனர் என்று குர்ஆனில் இறைவன் கூறுகிறார்.

அப்பாவியான இரு முஸ்லிம் நோன்பாளிகளை பெண்கள் குழந்தைகள் முன்னிலையில் அவரது வீட்டிற்குள்ளேயே கொலை செய்ய முயன்றதை பகிரங்கமாக கண்டியுங்கள். எங்களுடைய இதழ்களை படித்து குர்ஆனுடைய உண்மைகளை அறிந்து கொள்ளுங்கள்.

# குர்ஆன் வழியில் நம் தொடர்பு தொழுகை

பல முஸ்லிம்கள் தங்கள் சொந்த மார்க்கத்தைப் பற்றிக் கேட்கும் ஒரு பிரபலமான கேள்வி தொழுகையை எப்படித் தொழ வேண்டும் என்பது குர்ஆனில் எங்கே இருக்கிறது? என்பதாகும்.

இக்கேள்விக்கான விடையைத் தெரிந்து கொள்ள, நமக்கு மறைக்கப்பட்ட அல்லது நம்மால் மறக்கப்பட்ட மூன்று விஷயங்களைத் தெரிந்து கொள்ள அல்லது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக இறைவன் தன் திருமறையில் அல்குர்ஆன் தெளிவானது, (39:27-29) விவரிக்கப்பட்டது (6:114) முழுமையானது (6:115) என்று கூறுகிறார். இதைத் தவிர வேறு எதுவும் மார்க்க ஆதாரம் ஆகாது என்பதற்கு இறைவனே சாட்சியாக இருக்கிறார். (6:19) இது அனைத்தை யும் கற்றுக்கொடுப்பதாகவும், விளங்கிக் கொள்ள இலகுவான தாகவும் இருக்கிறது என்றும் வாக்களிக்கிறார், என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, இன்று நாம் பின்பற்றி வரும் தொடர்பு தொழுகை, நோன்பு, ஸக்காத் (கடமையான தர்மம்) ஹஜ் ஆகிய வணக்க வழிபாடுகளைக் கொண்ட இஸ்லாம் முதலில் இப்றாஹீம் நபிக்குக் கொடுக்கப்பட்டதாகும் என்று குர்ஆன் கூறுவதை அறிந்து கொள்ள வேண்டும். 2:128ம் வசனத்தில் இப்றாஹீம் நபி தங்களுக்கு மார்க்க வழிபாட்டு முறைகளைக் கற்றுத்தர வேண்டும் என்று இறைவனிடம் - வேண்டி பெற்றதை நாம் காண்கிறோம்.

"இப்றாஹீம் கஃபாவின் அடித்தளத்தை உயர்த்திய போது, இஸ்மாயிலுடன் சேர்ந்து பிரார்த்தித்தார். எங்கள் இரட்சகரே எங்களிடமிருந்து - இப்பணியை ஏற்றுக்கொள்வீராக! நிச்சயமாக நீர் செவியேற்பவராகவும், நன்கறிந்த வருமாக இருக்கின்றீர். எங்கள் இரட்சகரே, உமக்கு அடிபணிந்தவர்களாக (முஸ்லிம்களாக) எங்களை ஆக்குவீராக. எங்கள் சந்ததியரி லிருந்து ஒரு சமூகத்தை உமக்கு அடி பணிந்தவர்களாசக (முஸ்லிம்களாக) இருக்கச் செய்வீராக. எங்களுக்கு உம்மை வழிபடக்கூடிய (சடங்கு) முறைகளை கற்றுத் தருவீராக. எங்களுக்கு மீட்சி அளிப்பீராக நிச்சயமாக நீர் மீட்பவராகவும், கருணை மிக்க வராகவும் இருக்கின்றீர் (2:127-128)

இறைவன் அவர்களது பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு இறைவனை வணங்கு

தற்குரிய வழிபாட்டு, சடங்கு முறை களைக் கற்றுக்கொடுத்ததை 21:72-73 வசனங்களில் நமக்குக் கூறுகிறார்.

அவருக்கு நாம் இஸ்ஹாக்கையும், யாக்கூபையும் பரிசாக அளித்தோம். மேலும் அவர்களை அல்லாஹ் வின் கட்டளைப்படி நேர்வழிகாட்டும் தலைவர்களாகவும் ஆக்கினோம். மேலும் அவர்களுக்கு நன்மையான செயல்களையும், ஸலாத் எனும் தொழுகை மற்றும் ஸக்காத் என்னும் கடமையான தர்மம் ஆகியவற்றின் செயல் முறையையும் கற்றுக் கொடுத்தோம் (21:72-73)

இதிலிருந்து தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் ஆகிய கிரியைகள் ஹதீஸ்கள் கூறுவது போல் முஹம்மத் நபி முதலில் பெற்று நமக்குத் தந்ததல்ல என்றும், அவை ஏற்கனவே நிலை நாட்டப்பட்டி ருப்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம். (ஹதீ ஸ்கள் இறைவன் முதலில் 50 வேளைத் தொழுகையைக் கடமை ஆக்கினார் என்றும் பிறகு மூஸா நபியின் ஆலோசனையின் பேரில் இறைவனிடம் குறைத்துக் கேட்டு, 5 வேளையாக இறைவன் மாற்றினார் என்றும் ஒரு கதையைக் கூறுகின்றன. இதை எல்லா முஸ்லிம்களும் நம்புகிறார்கள். 50 வேளைத் தொழுகை என்றால் எத்தனை நிமிடத்திற்கு ஒரு தொழுகை தெரியுமா? 27 நிமிடத்திற்கு ஒரு தொழுகை! உண்ண முடியாது, உறங்க முடியாது. வேறு எதுவுமே செய்ய முடியாது. மனிதனின் கஷ்டங்களை இறைவன் அறியாதவர் போலவும், முஹம்மத் நபி மனிதர்கள் சார்பாக இறைவனிடம் வாதாடியவர் போலவும் ஹதீஸ்கள் சித்தரிக் கின்றன). மேலும் முஹம்மத் நபிக்கு முன்னரே இக்கிரியைகள் செய்யப் பட்டு வந்தன என்பதற்கு ஏராளமான குர்ஆன் வசனங்கள் நமக்கு ஆதாரமாக உள்ளன. அவை 22:78, 16:123, 8;33-35 3:43, 19:3, 2:183, 187, 22:26-27. இவ்வசனங்களைப் படிப்பவர்கள் முஹம்மத் நபி காலத்திற்கு முன்னரே தொழுகை, நோன்பு, ஸக்காத், (கடமையான தர்மம்,) ஹஜ் ஆகிய வழிபாட்டு முறைகள் நிலை நாட்டப்பட்டு, பின் பற்றப்பட்டு வந்துள்ளது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

மூன்றாவதாக, குர்ஆனில் இல்லை என்று இவர்கள் சொல்லும் சில விஷயங்களுக்கு, கேள்விகளுக்கு, தெளிவான, முடிவான பதில்கள் இவர்கள் மார்க்க ஆதாரம் என்று நம்பும் ஹதீஸ்களிலும் இல்லை என்பதையும் இஸ்லாமிய சமூகத்தில் இன்றுள்ள பற்பல பிரிவுகள் நமக்குக் காட்டுவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாம் மார்க்கத்தின் தலையாய வழிபாட்டு முறையான தொடர்புத் தொழுகை பற்றி இறைவன் தன் விவரிக்கப்பட்ட வேதத்தில் தேவையான அளவுக்குக் கூறி இருக்கிறார். குர்ஆனின் அடிப்படையில் தொழுவது எப்படி

என்பதை நாம் இறை வசனங்களில் காண்போம். மார்க்கம் நிலை நாட்டப்பட்டு உள்ளது என்பதையும், குர்ஆன் பிரித்தறிக்கும் ஃபுர்கானாக உள்ளது என்பதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நிச்சயமாக தொடர்புத் தொழுகை நம்பிக்கையாளர்கள் மீது நேரம் குறிப்பிடப்பட்ட கடமையாக இருக்கிறது (4:103) என்று கூறும் இறைவன் அந்த நேரங்கள் எவை என்பதையும் குறிப்பிட்டுக் காட்டு கிறார். 11:114, 24:58 ஆகிய வசனங்கள் ஃபஜ்ர் என்னும் விடியற்காலைத் தொழுகையையும், 17:78, 30:18 ஆகிய வசனங்கள் ளுஹர் என்னும் பகல் தொழுகையையும் 2:238 வசனம் அஸ்ர் என்னும் மாலைத் தொழுகை யையும் 11:114 வசனம் மக்ரிப் என்னும் அந்தித் தொழுகையையும், 24:58ம் வசனம் இஷா எனும் இரவுத் தொழுகையையும் குறிப்பிடுவதைக் குர் ஆனைப் படிப்பவர்கள் அறிந்து கொள்ள முடியும். மேலும், நிச்சயமாகத் தொழுகை நேரம் குறிப்பிடப்பட்ட கடமையாக உள்ளது என்று இறைவன் கூறுவதிலிருந்து குறிப்பிட்ட நேரங்களில் கடமையான அத்தொழுகைகளைத் தவிர வேறு எந்தத் தொழுகைக்கும் இறைவனின் அங்கீகாரம் இல்லை என்பதையும் நாம் அறிந்து கொள்கிறோம். ஹதீஸ்களின் அடிப்படையில் ஒவ்வொரு தொழுகைக்கு முன்னும் பின்னும் சுன்னத்' என்ற பெயரிலும், 'நஃபில்' என்ற பெயரிலும் தொழுகை களை ஏற்படுத்தி அது எத்தனை பகுதிகள் என்பதிலும் கருத்து வேறுபாடுகள் கொண்டிருக் கிறார்கள். இஸ்லாமிய அறிஞர்கள் என்று பெயர் பெற்றவர்களும், அவர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுபவர்களும் இதுமட்டு மல்லாமல் வித்ரு வாஜிபு என்றும், ளுஹா என்றும், இஷ்ராக் என்றும், தராவீஹ் என்றும் தஸ்பீஹீத் தொழுகை என்றும் ஏராளமான தொழுகைகளும் உள்ளன. அதிகமாகத் தொழுதால் நல்லது தானே, அதை ஏன் தடுக்க வேண்டும் என்பவர்கள், ஃபஜ்ர் தொழுகை இரண்டு ரக்க அத்துகள் மட்டும்தானே இருக்கிறது அதை ஏன் நான்காக ஆக்கக்கூடாது என்று ஒருவர் கேட்டால் இறைவன் விதித்ததை அதிகப்படுத்துவதா என்று கேட்பார்கள் அல்லாவா? எனவே இறைவன் விதித்ததற்கு மேல் அதிகப்படுத்தவது குற்றம் என்பதை நாம் அறிந்தே இருக்கிறோம். இருப்பினும் இத்தொழுகைகளுக்கு இறைவனின் அங்கீகாரம் இல்லா விட்டாலும் நபியின் அங்கீகாரம் இருப்பதாக நமக்குக் கூறப்பட்டதே இவற்றை நாம் ஏற்றுக் கொள்ளக் காரணமாக உள்ளது. இறைவன் விதித்தை முஹம்மத் நபி அதிகப் படுத்துவார்களா என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தால் நபியின் அங்கீகாரம் கடமையான தொழுகை களைத் தவிர வேறு எதற்கும் இல்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

நேரங்களைக் குறிப்பிட்ட இறைவன் நாம் தொழுகைக்குத் தயாரானால் ஒளு என்னும் அங்கசுத்தி செய்து கொள்ள வேண்டும் என்பதையும் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதையும் 5:6 வசனத்தில் கூறுகிறார்.

நம்பிக்கையாளர்களே நீங்கள் தொடர்புத் தொழுகைக்குத் தயாரானால் உங்கள் முகங்களைக் கழுவிக் கொள்ளுங்கள், உங்கள் கைகளை முழங்கை வரை கழுவிக் கொள்ளுங்கள், உங்கள் தலைகளைத் தடவிக்கொள்ளுங்கள், உங்கள் கால்களைக் கணுக்கால் வரை கழுவிக் கொள்ளுங்கள் .....' (5:6)

இவ்வளவு தெளிவாக இறைவன் கூறும் வரம்புகளை மீறி கைகளைத் தோள்பட்டை வரை கழுவுவது நபியின் நடைமுறை என்று ஹதீஸ்கள் கூறுகின்றன. இறைவனின் வரம்புகளை முஹம்மத் நபி மீறினார் என்பதாகச் சித்தரிக்கின்றன. இறைவரம்புகளை மீறுவது பெருங் குற்றம் என்று குர் ஆன் கூறுகிறது.

..... இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும் அவற்றை நீங்கள் மீறாதீர்கள். இவ்விதமாக அல்லாஹ் தன் வசனங்களை மனிதர்களுக்குத் தெளிவுபடுத்துகிறார், அவர்கள் மீட்சி பெறக்கூடும் என்பதற்காக. (2:187ன் இறுதிப்பகுதி) மேலும் 5:6ம் வசனம் தண்ணீர் கிடைக்காவிட்டால் தயம்மும் எப்படிச் செய்வது என்பதைக் கூறுகிறது. என்ன விஷயங்கள் ஒளுவை முறிக்கும் என்றும் கூறுகிறது. (மேலும் பார்க்க 4:43)

ஒளு செய்த பின்னர் தொழுகைக்காகக் கிப்லாவை முன்னோக்க வேண்டும் என்பதை 2:149, 150 வசனங்கள் கூறுகின்றன.

தொழுகைக்கு நிற்கும் போது உள்ளச்சத்துடன் இருக்க வேண்டும் என்று 23:1,2 வசனங்கள் கூறுகிறது. சோம்பலுடன் நிற்கக் கூடாது என்றும், பிறருக்குக் காட்டுவதற்காகத் தொழக்கூடாது என்றும் (4:142, 107:6) வசனம் கூறுகிறது.

தொழுகைக்காக கிப்லாவை முன்னோக்கி நின்றவுடன் தக்பீர் எனப்படும் அல்லாஹூ அக்பர் என்று சொல்லித் தொழுகையை ஆரம்பிப்பது நிலை நாட்டப் பட்டுள்ளது. தக்பீரைப் பற்றி 17:111 கூறுகிறது (ஃபதகப்பரஹூ தக்பீரா). 74:3 கூறுகிறது. (வரப்பக ஃபகப்பீர்) உமது இறைவனைப் பெருமைப் படுத்து வீராக! தொழகைக்கு முன் ஓத வேண்டும் என்று ஹதீஸ்கள் கூறும் வஜ்ஜஹது, தனா போன்ற அரபிகள் எழுதிய அரபி வாக்கியச் சுமைகளுக்கு குர்ஆனின் அங்கீகாரம் இல்லை. அவற்றையெல்லாம் மனனம் செய்ய முடியாமல் நாம் பூரணமாகத் தொழமுடியாது என்று அஞ்ச வைத்து ஷைத்தான் முஸ்லிம்கள் பலரையும் தொழுகையை விட்டுத் தடுத்து விட்டான்.

தக்பீர் கட்டியவுடன், ஓத வேண்டிய அல்ஃபாத்திஹா என்ற இலகுவான, சிறிய ப்ரார்த்தனை யையும் சிறிய துதிச் சொற்களையும் தவிர வேறு எதையும் மனனம் செய்யும் சிரமத்தை அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு ஏற்படுத்த வில்லை. இறைவன் மனிதர்களுக்கு இலகுவானதையே நாடுகிறார், மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு வசதி செய்து கொடுக்கவே விரும்புகிறார் - என்று அல்குர் ஆனின் வசனம் 2:185 கூறுகிறது.

இறைவனின் அற்புதக் கணிதக் குறியீடு அல்ஃபாத்திஹா அத்தியாயத்தில் அற்புதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அல்ஃபாத்திஹா அத்தியாயத்தை பிஸ்மில்லாஹ் முதல் வலள்ளால்லீன் வரை ஓதினால் நமது உதடுகள் மிகச் சரியாகப் பத்தொன்பது முறைகள் ஒட்டிப் பிரியும். இத்துடன் அரபி மொழியே அல்லாத, குர்ஆனில் இல்லாத ' ஆமீன்' என்ற வார்த்தையை உச்சரிக்கும் போது உதடுகள் 20 முறை ஒட்டி இந்த அற்புத ரகசியக் குறியீடு (S e c r e t C o d e ) மீறப்படுகிறது. எனவே நம்பிக்கையாளர்கள் தொழுகையில் வலள்ளால்லீன் வரை மட்டுமே ஓதவேண்டும் என்று அறிந்து கொள்கிறோம்.

தொழுகையின் சில ரக் அத்துகளில் (பகுதிகளில்) அல்ஃபாத்திஹாவுடன் குர் ஆனில் உள்ள சில வசனங்களை முஸ்லிம்கள் ஓதுகின்றனர். குர் ஆன் ஓதுவதும், கற்பதும், நன்மைதான் என்றாலும் இறைவனுடன் நாம் தொடர்பு கொள்ளும் தொழுகையில் குர்ஆன் வசனங்களை ஓதுவது பொருளற்றதாகும். நாம் தொழும்போது குர்ஆனில் உள்ள பாடங்களையோ, சரித்திரச் சம்பவங்களையோ சட்டம் கூறும் வசனங்களையோ ஓதுவதில் என்ன பொருள் இருக்க முடியும். அல்லது 'குல் ஹீவல்லாஹி அஹத்' (கூறும்: இறைவன் ஒருவரே) என்று கூறுவதில் என்ன பொருத்தம் இருக்க முடியும்? இது, படைப்புகளிடத்தில் கூறப்பட வேண்டிய விஷயமே அன்றிப் படைத்தவனிடத்திலேயே அல்ல.

எனவே தொழுகையின் திறவுகோலான அல்ஃபாத்திஹா ஓதியவுடன் 'ருகூஉ' என்னும் நிலைக்குக் குனியவேண்டும். 'ருகூஉ' என்னும் குனிந்த நிலையும் ஸஜ்தா என்றும் சிரவணக்கமும் நிலைநாட்டப்பட்டுள்ளது. குர்ஆன் அவற்றையும் குறிப்பிடுகிறது உறுதிப் படுத்துகிறது. (பார்க்க 22:77)

'ருகுஉ' எனும் குனிந்த நிலையில் ஸிப்ஹான ரப்பியல் அளீம் (மகத்தான என் இறைவன் பெயரைத்துதிக்கிறேன்)
என்பதையே ஓத வேண்டும். இது குர்ஆனில் 56:74ல் குறிப்பிடப் படுகிறது. 'ஃபஸப்பிஹ் பிஸ்மி ரப்பிகல் அளீம்' (மகத்தான உமதிறைவனின் பெயரைத் துதிப்பீராக!)
பின்னர் ருகூஉ என்னும் குனிந்த நிலையில் இருந்து நிமிரும் போது ஸமிஃ அல்லாஹீ லிமன் ஹமிதா என்று கூற வேண்டும். இறைவன் தன்னைப் புகழ்வதைச் செவியேற்கிறார் என்பது இதன்

பொருள். இறைவனின் இத்தன்மை (ஸிஃபத்) 3:38ல் கூறப்படுகிறது. (இன்னக அன்தஸ் ஸ்மீவுத்துஆ நிச்சயமாக நீர் பிரார்த்தனையைச் செவியேற்பவராக இருக்கின்றீர்)

இதன்பின் ஸஜ்தா என்னும் சிரவணக்கம் செய்யும் நிலைக்குச் செல்ல வேண்டும். அந்நிலையில் 'சுப்ஹான ரப்பியல் அஃலா என்பதையே ஓதவேண்டும். (மேலான என் இறைவனைத் துதிக்கிறேன்). இதற்கான கட்டளை 87:1ல் உள்ளது. 'ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா - மேலான உமதிறைவனின் பெயரைத்துதி செய்வீராக! அதஷஹ்ஹித் என்னும் சாட்சி இருப்பில் நாம் 'ஷஹாதத்' (சாட்சிப்பிரமானம்) கூற வேண்டும். அந்நிலையில், 'அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹி வஹ்த ஹீ லாஷரீக்கலஹி என்பதை ஓத வேண்டும். 'சரியான ஷஹாதத் இதுவே என்பதை 3 : 1 8 குறிப்பிடுகிறது. இது முடிந்தவுடன் ஸலாமு அலைக்கும் என்று கூறி தொழுகையை முடிப்பதும் நிலை நாட்டப்பட்டுள்ளது. இது குர்ஆனில் (6:54) வசனங்களில் கூறப்படுகிறது.

ஒரு ருகூவு, இரண்டு ஸஜ்தா, ரக்க அத்துகள் எத்தனை என்பதெல்லாம் 19 என்னும் அற்புதக்குறியீட்டிலும் சரியாக அமைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 1.

| ஃபஜ்ர் | ளுஹர் | அஸ்ர் | மக்ரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 12241 | 24482 | 34482 | 43362 | 54482 |

1122412448234482433625 4482 எனும் இந்த நீண்ட எண்ணில் முதல் எண் அல்ஃபாத்திஹா என்னும் அத்தியாயத்தைக் (இது மட்டுமே ஒவ்வொரு ரக்கஅத்திலும் ஓதப்பட வேண்டும் என்பதால்) குறிக்கிறது. அடுத்த வரும் எண் ஃபஜ்ர் எத்தனையாவது தொழுகை என்பதைக்குறிக்கிறது. அதை அடுத்த எண் அது எத்தனை ரக்கஅத் என்பதையும் அதற்கடுத்த எண் எத்தனை ருகூவு (குனிதல்) என்பதையும் அதற்கடுத்த எண் ஸஜ்தா (சிரவணக்கம்) எத்தனை என்பதையும் அதற்கடுத்த எண் எத்தனை தஷஹ்ஹீத் (சாட்சி இருப்பு) என்பதையும் குறிக்கிறது. தொடர்ந்த எண்கிள் இவ்வாறே ளுஹர், அஸ்ர், மக்ரிப் இஷா ஆகிய தொழுகைகளின் வரிசை எண், ரக்க அத் எனும் பகுதிகள், ருகூஉ எனும் குனிந்த நிலை, ஸஜ்தா என்னும் சிரவணக்கம், தஷஹ்ஹீத் என்னும் சாட்சி இருப்பு ஆகியவற்றை நமக்கு உறுதிப் படுத்துகிறது. இந்த நீண்ட எண் 19ன் பெருக்குத் தொகையாகும். இதன் மூலம் நாம் ஒரு ரக்க அத் (பகுதி) என்பது ஒரு ருகூவு (குனிதல்), இரண்டு ஸஜ்தா (சிரவணக்கம்) ஆகியவற்றைக் கொண்டது தான் என்று அறிந்து கொள்கிறோம். மேலும் ஒவ்வொரு தொழுகையிலும், எத்தனை தஷஹ்ஹீத் (சாட்சி இருப்பு) என்றும், அது எத்தனை பகுதிகள் கொண்டது என்றும் உறுதிப்படுத்தப் படுகிறோம். அறிந்து கொள்கிறோம். இது தொழுகையின் ஒவ்வொரு அம்சத்தையும் உறுதிப்படுத்துவதாக

அமைகிறது. இது தற்செயலானதா அல்லது இறைவன் அவ்வாறு அமைத்திருக்கிறாரா? நீங்களே நீதிபதியாக இருந்து கொள்ளுங்கள்.

மேலும் ஒவ்வொரு தொழுகையும் எத்தனை பகுதிகளைக் கொண்டது என்பதையும் 19 என்னும் இறைவனின் முத்திரைக் கையொப்பம் நமக்குக் காட்டுகிறது. அன்றாடத் தொழுகைகள் முறையே 2, 4, 4, 3, 4, பகுதிகள் கொண்டதாகும். இவற்றின் கூட்டுத் தொகை 2+4+4+3+4 = 17 ஆகும். இந்த 24434 என்ற எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

24434 = 19 x 1286!

இந்த ஈவுத் தொகையைக் கூட்டினால் 1+2+8+6 = 17! இது ஒரு நாள் முழுமைக்கும் ஆன தொழுகை யின் ரக்க அத்துகள் (பகுதிகள்) ஆகும்!

இன்னும் அதிகமாக, ஒவ்வொரு தொழுகையின் ரக்க அத்தையும் தொடர்ந்து அத்தொழு கையின் வரிசை எண்ணையும் நாம் எழுதினால், அந்த எண்ணும் 19ன் பெருக்குத் தொகையாகவே அமை கிறது.

அதாவது, 2142433445 = 19 x 112759655!

இன்றைய முஸ்லிம்கள் பெரும்பாலானோர் தங்கள் தொழுகையில் தஷ்ஹ்ஹீ த் எனும் சாட்சி இருப்பில் முஹம்மத் நபியையும், இப்றாஹீம் நபியையும் அழைப்பதன் மூலமும், நினைவு கூர்வதன் மூலமும் தங்கள் தொழுகையை வீணாக்கிக் கொள்கிறார்கள். ஏனெனில் இறைவன் 72:18ல் பள்ளிகள் (மஸ்ஜித் எனும் - சிரவணக்கம் செய்யும் நிலைகள்) அனைத்தும் இறைவனுக்குரியவை - அங்கே இறைவனுடன் சேர்த்து மற்றெவரையும் அழைக்காதீர்கள்! என்று கூறுகிறார். 20:14ல் என்னை நினைப்பதற்காக மட்டும் தொழுகை யை நிலை நிறுத்துங்கள் என்று கூறுகிறார். தெளிவான இக்கட்டளைக் கட்குமாறு செய்வதன் மூலம் அவர்கள் தங்களது தொழுகையின் பலனை இழக்கிறார்கள். எனவே தஷஹ்ஹுத் இருப்பில் நம்பிக்கையாளர்கள் 'அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ், வஹ்தஹு, லாஷரீக் கலஹு' (இறைவன் ஒருவரைத்தவிர வேறு யாரும் கடவுள் இல்லை , என்று நான் சாட்சி கூறுகிறேன். அவர் தனித்தவர் இணையில்லாதவர்.) என்பதைத் தவிர வேறு எதையும் கூறக்கூடாது.

**'ஆதமுடைய மக்களே! நீங்கள் தொழுகைக்குச் சென்றால் தூய்மையாகவும், நல்ல உடை யுடனும் செல்லுங்கள்' (7:31)**

என்று இறைவன் கூறுவதால் நம்மால் இயன்ற அளவு நல்ல உடை உடுத்திக்கொண்டு தொழவேண்டும் என்று நம்பிக்கையாளர்கள் அறிந்து கொள்கிறார்கள். (இருந்த சட்டையைக் கழற்றி மரத்தில் மாட்டி விட்டு வெறும் மேலுடன் தொழுதார் ஒரு நபித் தோழர் என்று ஹதீஸ்கள்

பதியப் பட்டிருக் கின்றன இறைவனின் தெளிவான கட்ட ளைக்கு மாறு செய்தவர் எப்படி நபியின் தோழராக இருக்க முடியும்? மேலும் நாம் தொழும்போது என்ன தொனியில் ஓத வேண்டும் என்று 17:110ல் இறைவன் கூறுகிறார்.

**"உமது தொழுகையில் நீர் அதிக சப்தமிட்டும் ஓதக் கூடாது. மனதிற்குள்ளும் ஓதக்கூடாது நடுத்தரமான தொனியில் ஓதுவீராக" (17:110)**

இவ்வசனத்தின் மூலம், நாம் தொழும் போது நடுத்தரமான தொனியில் ஓத வேண்டும் என்று அறிந்து கொள்கிறோம் இவ்விஷயத்தில் இன்றைய முஸ்லிம் சமூகம் மாறு செய்வது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

இது வரை நாம் அன்றாடத் தொடர்புத் தொழுகைகளைக் குர் ஆனின் அடிப்படையில் எப்படித் தொழுவது என்பதைக் கண்டோம். **இறைவன் நாடினால் அடுத்த இதழில் ஜும்ஆ என்னும் கூட்டுத் தொழுகை பற்றியும் தொழுகை யைப் பற்றிக் குறிப்பிடும் மற்ற இறை வசனங்களையும் காண்போம்.**

★

# தொடர்புத் தொழுகையின் அம்சங்கள்:

1. கியாம் - தக்பீர் கூறி (அல்லாஹு அக்பர்) நிலை நிற்றல், கிப்லாவை முன்னோக்கி இதில், அல்ஃபாத்திஹா மட்டுமே ஓத வேண்டும். பிஸ்மில்லாஹ்வில் துவங்கி வலள்ளால்லீன் வரை மட்டுமே (ஆமீன் சொல்வது தவறு)

2. ருகூவில் - ஸுப்ஹான ரப்பியல் அளீம்

3. ருகூவிலிருந்து எழும்போது ஸமிஃ அல்லாஹுலிமன் ஹமீதா

4. ஸஜ்தா - ஸுப்ஹான ரப்பியல் அஃலா. இரு ஸஜ்தாக்களிடையே எதுவும் ஓத வேண்டியதில்லை.

5. தஷஹ்ஹுத் - சாட்சி இருப்பில் அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு. (விரல் சமிக்ஞை எதுவும் இல்லை )

6. தொழுகையின் முடிவில் ஸலாமு அலைக்கும் என வலது, இடதுபுறம் கூறி தொழுகையைநிறைவுசெய்ய வேண்டும்.

**ஐவேளைத்தொழுகையின்ரகஅத்துகள் (பகுதிகள்)**

ஃபஜ்ர்(விடியற்காலைத்தொழுகை)2ரக அத்துகள், ளுஹ்ர் (நண்பகல் தொழுகை)
4 ரகஅத்துகள், அஸ்ர் (மாலைத் தொழுகை)
4 ரகஅத்துகள், மக்ரிப் (அந்தித் தொழுகை)
3 ரகஅத்துகள், இஷா (இரவுத் தொழுகை)
4 ரகஅத்துக, மொத்தம் 17 ரகஅத்துகள்

24434 = 1286 x 19

1+2+8+6 = 17

**அல்லாஹ்வால் ஏவப்படாத தவிர்க்கப்பட வேண்டிய தொழுகைகள்**

1. சுன்னத் தொழுகை 2. நஃபில் தொழுகை 3. வித்ரு தொழுகை 4. இஷ்ராக் தொழுகை 5. லுஹா தொழுகை 6. தகஜ்ஜத் தொழுகை 7. தராவீஹ் தொழுகை 8. பெருநாள் தொழுகை

**அல்லாஹ் மார்க்கமாக்கி வைக்கா ததை மார்க்கமாக்கி வைக்கக் கூடிய இணையாளர்கள் உங்களுக்கு இருக்கின்றனரா?**

அல்குர்ஆன் (42:21)

# காதியானி மதத்தவரை புரிந்து கொள்ளுங்கள்!

இது அல்குர்ஆனின் சகாப்தம். குர்ஆன் மட்டும் மார்க்கம் என்ற குரல் ஒலிக்கத் துவங்கியதும், அச்செய்தி பரவத்துவங்கி விட்டதும், குர்ஆன் ஒளி வீச ஆரம்பித்ததும், சுன்னத்தும் ஹதீஸீம் தேவை, ஹதீஸ்கள் இல்லாமல் குர்ஆன் முழுமையானது ஆகாது என்று பேசி, எழுதி வருபவர்களின் கண்களை உறுத்த ஆரம்பித்து விட்டது. முஹமதிய மதத்தைச் சேர்ந்த மற்ற பிரிவினர்களைப் போலவே, காதியானிகளும் தங்கள் பங்குக்கு தங்களின் ஆஸ்தான இதழின் 1999 டிசம்பர் இதழில் குர்ஆன் மட்டும் போதும் என்று கூறுபவர்கள். பொய்யர்களும், கர்வமிக்கவர்களும் என்று நான்காம் மஸீஹ் கூறியதையும், காதியானிகளின் தலைவர் (மிர்ஸா குலாம்) குர்ஆன் மட்டும் போதும் என்று கூறுபவர்கள் முஃமின்கள் அல்ல ரென்றும், அவர்கள் ஒரு நாள் குர்ஆனையும் கை விட்டு விட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கூறும் ஒரு அடி முட்டாள் தனமான முன்னறிவிப்பையும் வெளியிட் டிருக்கிறார்கள்.

மிர்ஸா குலாமின் பேரன் இப்பொழுது குர்ஆன் இறைவனால் மெய்ப்பிக்கப்பட்டு விட்ட வேதம் என்பதை அறியாதவரா என்ன? '19' என்ற அற்புதம் மூலம் குர்ஆன் இறைவேதம் தான் என்ற உண்மை மறுக்க முடியாதவாறு நிரூபிக்கப் பட்டு விட்டது என்பது ஷைத்தா னுக்கும் அவன் பிரதிநிதிகளுக்கும் மிகவும் நன்றாகத் தெரியும். ஆயினும் அவர்களுக்கு ஷைத்தா னின் பழைய தந்திரங்களான உண்மையை மறைக்க முயற்சி செய்தல், பொய்யான வற்றைக் கூறி அச்சுறுத்தல், மேலும் அவதூறு கூறுதல் ஆகியவற்றைத் தவிர வேறு ஆயுதங்கள் எதுவும் அவர்களிட மில்லை. எனவே அவற்றையே அவர்கள் இதிலும் பிரயோகித்தி ருக்கிறார்கள்.

நாங்களும் ஹதீஸ்களை நம்புகிறோம் என்று இவர்கள் கூறுகிறார்கள். ஏனெனில் இவர் களின் நபி தன்னை நபியென்று பொய்யாக வாதித்ததே ஹதீஸ்களின் துணை யோடுதான்.

ஹதீஸ்களின் அடிப்படையி லேயே காதியானிகளும் வாதிடுவ தால் தான் காதியானிகளை முஹம் மதியர்களின் மற்ற பிரிவினர் கள் வாதத்தில் வெல்ல முடியாமல் திணறுகிறார்கள். ஆயினும், காதி யானிகளே! நீங்கள் என்னதான் நாங்களும் உங்களைப் போலத்தான் என்று காட்டிக் கொள்ள முயன் றாலும் அவர்கள் உங்களைத்

தங்களோடு சேர்த்துக் கொள்ள மாட்டார்கள்

மேலும் அவர்களின் அவ் விதழில் மிர்ஸாவின் பேரன் நான்காம் கலீஃபத்துல் மஸீஹ்? தங்கள் ஸாட்டிலைட் சானலில் கேள்வி பதிலில் இங்கு, தமிழகத்தில் நாம் எழுப்பிய கேள்வியான அத்தஹிய்யாத்தில் நபியை அஸ்ஸலாமு அலைக்க' என்ற முன்னிலைச் சொல்லால் அழைப்பது ஏன் என்ற கேள்வியை ஒருவர் கேட்க, அதற்கு (Masih IV) நான்காம் மஸீஹின் பதில் என்று மிகவும் விந்தையான ஒரு பதிலை வெளியிட்டிருக்கி றார்கள்.

மேற்படி கேள்வியை தமிழ கத்துப்பிரபல, 'முல்லாக்கள்' கண்டு கொள்ளாமல் நழுவிக் கொண்டி ருக்கும் போது இதற்கு ஒரு பதில் கூறத் துணிந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி யான விஷயம்! (நிர்ப்பந்தமோ என்னவோ?)

அதற்கு அவர் பதில் என்ன தெரியுமா? நீங்கள் எவரையும் புகழ்ந்துரைக்க நாடும்போது அவரைப் பற்றிய மிகுதியான நேசம் உங்களுக்கு இருப்பின் அவர் அருகில் இல்லாமலிருந்தாலும் படர்க் கையில் கூறாமல் முன்னிலைப் படுத்திக் கூறுகிறீர்கள். இவ்வாறு கூறுவது சம்பந்தப்பட்டவரின் நெருக் கத்தை உணர்தலோடு சம்பந்தப்பட்ட விஷயமாகும்.

சற்று சிந்தித்துப்பாருங்கள்! நமக்கு மிகவும் பிரியமான ஒரு மனைவியோ, மகனோ, தலை வனோ இருக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவர் முன்னிலையில் இல்லாவிட்டாலும் முன்னிலைப் படுத்திக் கூறுகிறாமா என்ன? யாரை அப்படிக் கூறுகிறோம்? இறை வனைத் தவிர வேறு யாரையாவது எல்லா நேரமும், எல்லா இடத்திலும் முன்னி லைப்படுத்திக் கூறுகிறோமா?

அதுவும் வழமையாக ஒவ்வொரு தொழுகையிலும், ஐந்து வேளையும் இவ்வாறு செய்கிறோம். இதுவும் நெருக்கத்தோடு சம்பந்தப் பட்ட விஷயம் தானோ? இத்தகைய நெருக்கம் நம்பிக்கை கொண்டவர் களுக்கு இறைவனைத் தவிர வேறு யாரிடத்திலும் இல்லை .

ஸவூதியில் இப்போது இந்தத்தொந்தரவு தாங்காமல், பேசாமல் அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்ன பிய்யு என்பதில் அலைக்க என்ற முன்னிலைச் சொல்லை எடுத்து விட்டு அலா என்ற சொல்லை மாற்றி விடலாம், என்று யோசித்தார்களாம். (ஒரு தவ்ஹிது வாதி கூறிய தகவல்) 19' இந்த நிராகரிப்பாளர்களையும், நயவஞ்சகர்களையும் தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டது. இது இத்துடன் நின்று விடாது. பொய்யர் களின் ஷைத்தானியக் கூடாரங்கள் முற்றிலும் காலியாகும் வரை இது தொடர்ந்து நடக்கும்.

சிரவணக்கம் (ஸஜ்தா) செய்யுமிடங்கள் அல்லாஹ்வுக்குரிய வை அங்கே அவருடன் வேறு

யாரையும் அழைக்காதீர்கள் (72:18) என்ற இறைவசனம் இவர்களைப் புற முதுகிட்டோடச் செய்யும் என்பது திண்ண ம்.

காதியானிகளிடம் உங்கள் மிர்ஸா குலாம் - நபி என்பதற்கு என்ன ஆதாரம் காட்டினார் என்று நாம் வினவினால் 'காஃபாவின் இறைவன் மீது சத்தியமாக நான் நபி என்று கூறினார்' என்பதைத் தவிர வேறு ஆதாரங்கள் எதுவும் அவர்களிடம் இல்லை .

மேலும் முஹம்மத் இறுதி நபியாக இருக்கிறார் என்ற இறைவாக்குக்கு முரணாக மிர்ஸா குலாம் நபியாக இருக்கவே முடியாது. நபிமார்கள் வேதம் கொடுக்கப் படுவார்கள் என்று குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது.

மேலும் எல்லாத் தூதர்களும் சொன்ன 'லா இலாஹ இல்லல்லாஹ்' (3:18) என்ற (ஷஹாதத்) கலிமாவை இவர் கூறவில்லை. முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று அல்லாஹ்வுடன் முஹம்மது ரசூலுல்லாஹ்வை இணைத்த ஷஹாதத்தைத்தான் இவரும் கூறுகிறார்.

மேலும் மிர்ஸா தன்னுடைய இந்த ஷைத்தானியப் பிரசாரத்தால் அடைந்த பலன் ஏராளம். அவர் வாழ்வும் ஒரு இறைத் தூதரின் வாழ்வைப் போல் இருந்ததில்லை தன்னைக் குருட்டுத்தனமாகப் பின் பற்றும் ஒரு கூட்டத்தை அவரால் உண்டாக்க முடிந்ததே தவிர சிந்தனையுள்ள இறையடியார்களை அல்ல.

குர்ஆன் முழுமையானது அல்ல என்று நம்பும் முஹம்மதியர் களில் ஒருவரான மிர்ஸா குலாம் நபியல்ல, இறைத்தூதர் அல்ல என்பதற்கான ஆதாரங்களை இன்ஷா அல்லாஹ் பின்வரும் இதழ்களில் விரிவாகக் காண்போம்.

☆

# அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் - ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், புதிய நினைவூட்டல் புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.www.kadavulmattum.org

# 19க்கு ஆலிம்களின் அங்கீகாரமும் பாராட்டும்

நமது இதழ்களில் அல்குர்ஆன் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதமான கணிதக் கட்ட மைப்பில் அமைக்கப் பட்டிருப்ப தையும், அது அல்குர்ஆன் இறை வேதம் தான் என்பதை மெய்ப்பிப்பதையும், அதன் எந்த ஒரு விஷயத்தையும் மாற்றி விட முடியாதபடி பாதுகாப்பதாகவும் உள்ளது என்பதையும் நாம் கண்டு வருகிறோம்.

இந்த அற்புதம் Dr. ரஷாத் கலீஃபா சுயமாகக் கற்பித்துக் கூறியதல்ல. இதைப் பற்றி 74 வது அத்தியாயம் முழுவதும் இறைவன் கூறுகிறார். இதை ஒரு மாபெரும் அற்புதம் என்றும் கூறுகிறார். (பார்க்க 74:35)

மேலும் இந்த அற்புதத்தை முஸ்லீம் சமுதாயம் முதலில் ஏற்றுக்கொண்டது பின்னர் நிராகரித்து விட்டது. உலகப் புகழ் பெற்ற இஸ்லாமியப் பிரச்சாரகர் அஹ்மத் தீதாத் இந்த அற்புதத்தை விளங்கி முதலில் ஏற்றுக்கொண்டு அதைப் பிரச்சாரமும் செய்தார். 19 என்னும் அற்புதத்தை அவர் விவரிக்கும் வீடியோ கேஸட்டுகளும், அதைப் பற்றி அவர் எழுதிய ALQURAN - The Ultimate Miracle என்ற புத்தகமும் இன்றும் புழக்கத்தில் உள்ளன.

இது மட்டுமல்ல, தமிழகத்திலும் இப்புத்தகம் மௌலானா M.அப்துல் வஹ்ஹாப் M.A.B.Th அவர்கள் தலைமையில் வெளியிடப்பட்டது. 19' என்னும் அற்புதத்தை ஏற்றுக்கொள்ளாமலா, விளங்கிக் கொள்ளாமலா அதை வெளியிட்டு ஒரு உரையும் நிகழ்த்தினார்?

மேலும் மௌலானா M.அப்துல் வஹ்ஹாப் M.A.B.Th, மௌலானா K.A. நிஜாமுத்தீன் மன்பயீ, மௌலானா ஹாஃபிள் R.K.அப்துல் காதிர் பாக்கவி ஆகிய மூவரும் மொழிபெயர்த்த குர்ஆன் தர்ஜுமாவில் 'அலைஹா திஸ்அத் அஷர் (அதன் மேல் 19' இருக்கிறது) என்ற 74:30 வசனத்திற்கு அடிக் குறிப்பாக ஒன்றை வெளியிட்டிருக் கிறார்கள் அதை அப்படியே கீழே தந்திருக்கிறோம்.

**"பத்தொன்பது விஷயங்கள் அல்லது ' 'பத்தொன் பது" பேர் என்பது பற்றி ஏராளமான விளக்கங்கள் கொடுக் கப்பட்டுள்ளன. திருக்குர் ஆனின் வசனங்களின் ஒவ்வொரு எழுத்துக் கும், அப்ஜத் கணக்குப்படியான மதிப்பெண்ணைக் கொடுத்து எல்லா எண்களையும் கூட்டினால் அக்கூட்டுத் தொகை 19 அல்லது 19ன் பெருக்குத் தொகையாகவே**

**இருக்கும். பிஸ்மில்லாஹிர்ரஹ் மானிர்ரஹீம் என்பதில் உள்ள எழுத்துக்கள் 19, மொத்தம் குர் ஆனின் சூராக்கள் 114. இது 19ன் பெருக்குத் தொகையாகும். இவ்வாறெல்லாம் கம்ப்யூட்டர் வைத்து, ஒவ்வொரு ஆயத்துக்கும் 19க்கும் தொடர்பு இருக்கின்றது என்று ஆராய்ந்து நிரூபித்தார். பேராசிரியர் ரஷாத் கலீஃபா. இது பற்றி அவர் ஒரு ஆய்வு நூலும் எழுதி, இந்த '19' என்ற எண்ணை வைத்து அல்லாஹ் திருக்குர்ஆனின் தூய்மையை எக்காலத்திற்கும் காப்பாற்றுவான் என்று அறிவித் தார். உலகெங்குமிருந்தும் அவருக் குப் பாராட்டுக்கள் குவிந்தன. அதனால் அவர் தலைக்கனம் கொண்டார். இறுதியில் தாமே ஒரு நபியென்று பிரகடனம் செய்தார். மூன்று ஆண்டுகட்கு முன் அமெரிக்காவில் ஆரிஸோனாவில் வைத்துச் சுட்டுக் கொல்லப் பட்டார்.**

இதைப் படிப்பவர்கள் இவர்கள் 19 என்ற அற்புதத்தை விளங்கிக் கொண்டுள்ளதைப் புரிந்து கொள்ள முடியும். மேலும் தன்னை ஒரு நபியென்று பிரகடனம் செய்ததாக எழுதியிருக்கிறார்கள். இது பொய்யும், சூழ்ச்சியுமாகும். Dr. ரஷாத் கலீஃபா தன்னை நபி யென்று பிரகடனம் செய்யவில்லை. மெய்ப்பிக்கும் தூதர் (3:81) என்றே பிரகடனம் செய்தார். இறைவன் முஹம்மத் நபியை இறுதி நபியென்று மட்டுமே கூறுகிறார். இறுதித் தூதர் என்று கூறவில்லை (பார்க்க 33:40) **'Dr.ரஷாத் கலீஃபா குர்ஆனை நிரூபித்தார்'** என்று இவர்கள் குறிப்பிட்டிருப்பது இங்கே கவனிக்கத் தக்கது.

மேலும் உலகெங்குமிருந்தும் பாராட்டுக்கள் குவிந்ததால் அவர் தலைக்கனம் கொண்டு தன்னை நபியென்று பிரகடனம் செய்ததாக எ ழு தி யிருக்கிறார்கள் நபியென்றோ, தூதர் என்றோ அறிவிப்பது ஏதோ ஆணழகன் போட்டியில் கலந்து கொள்வது போன்று எண்ணிக் கொண்டார்கள் போலும். தூதரென்று அறிவித்து அதன்படி வாழ்ந்து, உண்மையை மக்களுக்கு அறிவிப்பது என்பது இலகுவான பணியல்ல.

தூதரென்று அறிவித்தால் உலகம் முழுவதும் இருந்து வரும் பாராட்டுக்கள் நின்று விடும் என்பது Dr. ரஷாத் கலீஃபா அறியாத ஒரு விஷயமாகவா இருந்திருக்கும்? தன்னைப் புகழும் இவர்கள் உடனே இகழ ஆரம்பித்து விடுவார்கள் என்பதை மெய்ப்பிக்கும் தூதர் அறியாமலா இருந்திருப்பார்? Dr.ரஷாத் எழுதிய Qur- An, Hadith and Islam என்ற புத்தகத்தின் முன்னுரையைப் படிப்பவர்கள் அவர் தன் உயிருக்கு இருந்த அச்சுறுத்தலை நன்கு அறிந்திருந்தும் தொடர்ந்து குர் ஆன் மட்டும் மார்க்கம் என்ற சத்தியத்தை மக்களுக்கு எடுத்துரைத் தார். தான் கொல்லப்படலாம் என்பதை எதிர் நோக்கியவராகவே அவர் இருந்தார்.

இது 19 என்ற இறைவனின் அற்புதத்தை எடுத்துக் காட்டிய தற்காக Dr.ரஷாக் கலீஃபா எந்தக் கூலியும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது.

ஆயினும் முதலில் 19 எனும் அற்புதத்தை ஏற்றுக்கொண்டு பின்னர் நிராகரித்தவர்களைப்பற்றி இறைவன் 3. 86ல் குறிப்பிடுகிறார்

மெய்ப்பிக்கும் தூதரைக் குறிப்பிடும் 3:81 வசனத்தைத் தொடர்ந்து 82வது வசனத்தில் மெய்ப்பிக்கப்பட்ட பின்னரும் நிராகரித்தால் அவர்கள் தீயவர்கள் தான் என்று கூறுகிறார். 83வது வசனத்தில் இஸ்லாம் என்றால் இறைவனுக்கு அடிபணிவது சரணடைவது என்ப்தே அர்த்தம் என்பதை விளக்குகிறார். வசனம் 84ல் தூதர்களிடையில் பேதம் பாராட்டு வது கூடாது என்ற இன்றைய முஸ்லீம்கள் மீறிக் கொண்டிருக்கும் மிக முக்கியமான கட்டளையைக் கூறுகிறார். வசனம் 85ல் இது அல்லாத மார்க்கம் இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது என்று கூறுகிறார். தொடர்ந்து 86வது வசனத்தில் இறைவன் கூறுகிறார்.

'உறுதியான ஆதாரங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பின்னர், தூதர் சத்தியம்தான், உண்மைதான், என்று சாட்சியாக இருந்து விட்டு, நம்பிக்கை கொண்ட பின் நிராகரித்து விட்ட மக்களுக்கு இறைவன் ஏன் வழிகாட்ட வேண்டும். இறைவன் அக்கிரமக் காரர்களை நேர்வழியில் செலுத்து வதில்லை .

## அறிவுடையவர்களே, நடுநிலையாளர்களே, இறையச்சத்துடன் மேற்கண்ட கட்டுரையை நன்கு சிந்தியுங்கள்.

**Point No.1**

பத்தொன்பது என்ற அற்புதம் பற்றி உலகிற்கு தெரிவிப்பது வேறு யாருமல்ல. அல்லாஹ்வே தனது வேதமான குர்ஆனில் (74:30) குறிப்பிடுகிறார். விளக்கியும் இருக்கிறார். மற்றொரு வசனமான 72.28-ல் எல்லாப் பொருட்களையும் எண்ணிக்கையால் மட்டுப்படுத்தி யிருக்கிறோம் என்று குறிப்பிடுகிறார்.

**Point No.2**

மார்க்க அறிஞர்களும், குர்ஆனை தர்ஜுமா செய்தவர்களுமான மௌலானா M.அப்துல் வஹாப் K.A.நிஜாமுத்தீன் மன்பயி மற்றும் K.R.அப்துல் காதிர் பாக்கவி மூவரும் இணைந்து கொடுத்தநற்சான்றுகளாவன.

a ) பேராசிரியர் ரஷாத் கலீஃபா குர்ஆனின் ஒவ்வொரு ஆயத்துக்கும் 19க்கும் தொடர்பு இருக்கிறது என்று ஆராய்ந்து நிரூபித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

b) 19 என்ற எண்ணை வைத்து அல்லாஹ் திருக்குர்ஆனின் தூய்மையை எக்காலத்திற்கும் காப்பாற்றுவான் என்று அறிவித்தார். (கவனிக்கவும் தூய்மையை என்பது ஒரு எழுத்தையோ ஒரு ஆடத்தை யோ கூடயாரும் குர்ஆனுக்குள் இணைத்து அல்லது எடுத்துகளங்கப் படுத்தி விடமுடியாது. அவ்வாறு இணைத்து விட்டாலும் 19 என்ற எண்ணைக் கொண்டு கண்டறிந்து நீக்கி தூய்மையை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பதே.)

**Point No.3**

உலகெங்கிலும் இருந்து டாக்டர் ரஷாத் கலீஃபாவிற்கு பாராட்டுக்கள் குவிந்தன என்றும் ஆலிம்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1400 வருடங்களாக வெளிப் படுத்தப்படாமல் இருந்த குர்ஆனின் மாபெரும் அற்புதமான (74:30), 19 மற்றும் அலிஃப், லாம், மீம் போன்ற முத்திரை எழுத்துக்களுக்கான அர்த்தமும் விளக்கமும் இன்னும் 19ஐக் கொண்டுள்ள குர்ஆனின் கணிதக் கட்டமைப்பு. இவைபற்றி எல்லாம் உலகம் முழுவதும் பலர் பாராட்டியுள்ளனர். நீங்களும் பொறுமையாக இறைவனின் முத்திரை 19 பற்றி தெரிந்து கொள்ள முயற்சியுங்கள்.

பேராசிரியர், ரஷாத் கலீஃபா பற்றி வரும் குர்ஆனின் வசனங்களான 72:25-28) பற்றி நீங்கள் திருப்தி கொண்டு தூதர் என்று ஏற்றுக் கொள்ளும் வரை உலகமே பாராட்டிய அவர் வெளிக்கொணர்ந்த குர்ஆனின் அற்புதமான 19 பற்றியும் இறைவழிப் பாட்டையும் தெரிந்து பயனடையுங்கள். அல்லாஹ்போதுமானவர்.

# இறைவனின் முத்திரை - 19

அல்குர் ஆன் மனித சக்திக்கு அப்பாற் பட்டவிதத்தில், அற்புதமான முறையில் 19' என்ற எண்ணைக் கொண்டு கட்டமைக்கப் பட்டிருப்பது குறித்த தகவல்களை நாம் இதற்கு முந்திய இதழ்களில் கண்டோம். இக்கட்டமைப்பு, அல்குர் ஆன் இறைவ னிடமிருந்து மனித குலத்திற்கு வழிகாட்ட இறக்கப்பட்ட வேதமே என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பித்து அதன் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாது காப்பதாகவும் இருக்கிறது என்பது குறித்த தகவல்கள் சிலவற்றை அறிந்து கொண்டோம்.

குர் ஆனுக்கு ஆதாரம், நபி கூறியதாக மனிதர்களால் எழுதப் பட்ட ஹதீஸ் தொகுப்புகளே - அதை விட்டு விட்டால் குர்ஆனுக்கு வேறு ஆதாரம் இல்லை என்று கூறும் மூடர்களுக்கு தங்களை மார்க்க அறிஞர்கள் என்று கர்வம் கொண்டி ருக்கும் அற்பமான மனிதர்களுக்கு அது சரியான பதிலடி கொடுத்து இறைவன் மனிதர்களிடத்தில் எந்தத் தேவையும் அற்றவர் என்று மெய்ப் பிப்பதையும் புரிந்து கொண்டோம்.

74 வது சூராவில் இறைவன் கூறுவது போலவே 19ன் அடிப்படையிலான இக்கட்டமைப்பு

● நிராகரிப்போருக்கு குழப்பமாகவும், சோதனையாகவும், தொந்தரவு செய்யக் கூடியதாகவும் அமைந்திருப்பதைக் கண் முன்னால் காண்கிறோம்.● வேதம் கொடுக்கப் பட்டவர்களுக்கு உறுதியைத் தருவ தாகவும்,● நம்பிக்கை கொண்டவர் களின் நம்பிக்கையை அதிகப்படுத்து வதாகவும் இவ்விரு சாராரின் சந்தேகங்களை அறவே போக்கக் கூடிய தாகவும் அமைந்திருப்பதை உணர்கிறோம்.

● நிராகரிப்போருக்கும் நயவஞ் சகர்களுக்கும் விளங்காமல் போய், அவர்களை வெளிப்படுத்து வதையும் நன்கு அறிகிறோம்.

மேலும், 19 என்ற எண்ணின் அடிப்படையிலான 'ஸகர்' என்ற இந்த அரண் மிகப்பெரிய அற்புத மாகத் திகழ்வதையும், மனிதர்களுக்கு இறைவன் ஒருவர் மட்டுமே என்பதை நினைவூட்டி, எச்சரிக்கை செய்வதையும் இறைவனை முன் னோக்கியோ அல்லது பின்னோக்கியோ செல்ல வைக்கிறது என்பதையும் காண்கிறோம்.(குறிப்பாகப்பார்க்க 74:31,37)

இவ்வளவிருந்தும், '19' என்ற இந்த அற்புதம் இறைவனின் அங்கீகாரம் பெறாதது போலவும் தற்செயலானது போலவும் சித்தரித்து மக்களைக் குழப்ப குர்ஆனின், மார்க்கத்தின் பாதுகாவலர்கள் - நாங்கள் தான் என்று மார்தட்டிக் கொள்ளும் முல்லாக்கள்' சமூகம்த முயன்று வருகிறது.

இறைவன் - கூறுகிறார் (41:53) நிச்சயமாக நம்

அத்தாட்சிகளை, அவை சத்தியம் தான் என்று அவர்கள் உணரும் வரை பல திசைகளிலிருந்தும், அவர்களுக் குள்ளும் நாம் காண்பிப்போம்.

இறைவனின் இவ்வாக்குப் படி '19' என்ற இந்த அற்புதம் நாளுக்கு நாள் விரிவடைந்து வருவதையும், இவற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர இவர்களுக்கு வேறு வழியில்லை என்ற நிலை ஏற்படப் போவதையும் நம்பிக்கை கொண்டவர்கள் அறிந்து கொள்கி றார்கள்

இக்கட்டமைப்பு இறைவனின் திட்டப்படி அமைக்கப் பட்டதுதான் என்பதையும், தற்செய லாக நடக்கக் கூடியதல்ல என்பதை யும் இவ்விதழில் நாம் காண்போம்.

காஃப் என்ற எழுத்தை முத்திரையாகக் கொண்ட இரு அத்தியாயங்களில் (42 மற்றும் 50) சரியாக 114 காஃப் எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இது குர்ஆனின் மொத்த அத்தியாயங்களின் எண்ணிக்கை ஆகும். காஃப் மகத் தான குர் ஆன் என்று 50வது அத்தியாயம் துவங்குகிறது. எனவே காஃப் என்பது குர் ஆனைக் குறிப்பதை நாம் அறிகிறோம்.

50வது அத்தியாயத்தில் இடம்பெறும் காஃப் 57=19x3

42வது அத்தியாயத்தில்

இடம்பெறும் காஃப் 5 7 = 1 9 x 3

57+57=114=19x6.

மேலும், காஃப் வல் குர்ஆனில் மஜீத் (காஃப், மேலும், மகத்தான இக்குர்ஆன்) என்ற 5.0:1 வசனத்தில் இடம்பெறும் மஜீத் என்ற வார்த்தையின் எண் மதிப்பு என்ன தெரியுமா? 57! 57=19x3!! (மீம் - 40 + ஜீம் - 3 + யே - 10 + தால் - 4 = 57! ) அல்குர் ஆன் என்ற வார்த்தை குர் ஆன் முழுதும் 57 முறைகள் மட்டும் இடம்பெற்றுள்ளன என்பது மற்றுமொரு அற்புதம்!

மேலும், அத் 42-ல் இடம்பெறும் வசனங்கள் 53. எனவே 42+53=95 =1975 அத் 50ல் இடம்பெறும் வசனங்கள் 45. எனவே 50+45=95 = 95x5 ! மேலும், குர் ஆனில் உள்ள 19ம் எண்ணிட்ட வசனங்கள் அனைத்திலும் இடம் பெறும் காஃப் என்ற எழுத்தின் எண்ணிக்கை 76=19x4 !

இத்தகைய அற்புதத்தை இறைவனைத் தவிர வேறு யாராலும் செய்ய முடியாது என்பதை உணர்ந்து உண்மைக்கு முன் பணிந்து அதனை ஏற்காமல், இறைவன் அறியாமல் நடந்து விட்ட ஒரு விஷயத்தை Dr.ரஷாத் கலீஃபா கண்டு பிடித்து மக்களை வழி கெடுத்துவிட்டார் என்று கூறுவோரை மறுத்து, இது இறைவன் அமைத்த ஒரு அற்புதம் தான் என்பதை இறைவன் நம்பிக்கை கொண்டோருக்கு (I n d i c a t e ) குறிப்பால் உணர்த்துவதைக் காண போம்.

லூத் நபியை மறுத்த நிராகரிப் பாளர்களைப் பற்றி இறைவன் 13 இடங்களில் குர் ஆனில் நமக்குக் கூறுகிறார். அவை 7:80, 11:70, 74, 89, ; 21:74; 22:43; 26:160; 27:54, 56; 29:28, 38:13, 50:13 மற்றும்

54:33. இவ்வசனங்களில் ஒன்றைத் தவிர மற்ற அனைத்து இடங்களிலும் 'கவ்மு லூத்' (லூத்தின் கூட்டத்தினர்) என்றே அவர்கள் விவரிக்கப்படு கிறார் கள். ஆனால், காஃப், முத்திரை உள்ள 50வது அத்தியாயத்தில் மட்டும் அவர்களை 'இக்வானு லூத் (லூத்தின் சகோதரர்கள்) என்று இறைவன் விவரிக்கிறார்.

மற்ற இடங்களில் குறிப்பது போல் இங்கும் கவ்மு லூத் என்று கூறியிருந்தால், (இவ்வார்த்தையில் காஃப் எழுத்து இடம்பெறுவதால்) 50வது சூராவில் உள்ள காஃப் எழுத்துக்களின் எண்ணிக்கை 58 ஆகி இருக்கும். மேலே விவரிக் கப்பட்ட இந்த அற்புதக் கட்டமைப் புக்கள் அனைத்தும் கலைந்து போயிருக்கும். ஆனால் இறைவன் நமக்குக் கூறுகிறார். 'அதன் மேல் '19' உள்ளது (74:30), எல்லா இடங்களிலும் கவ்மு லூத் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டாலும், 50வது அத்தியாயத்தில் மட்டும் இக்வானு லூத் என்ற வார்த்தையைப் பயன் படுத்தி இருப்பது. இது இறைவனால் அமைக்கப்பட்ட கட்டமைப்புதான் என்பதை அவர் நமக்குக் குறிப்பால் உணர்த்துவதாக உள்ளது. அனைவரும் ஏற்றுக் கொள்ளும், சரியான கணக்கியலின் படி ஒரு எழுத்து கூடினாலும், இவ்வற்புதக் கட்டமைப்பு கலைந்து போயிருக்கும், என்பது தெளிவு.

இங்கே குறிப்பிடத்தக்க மற்றொரு பொருத்தமான உதாரணம் 3:96ல் மக்காவை இறைவன் 'பக்கா' என்று குறிப்பிடுவதாகும். உலகப் புகழ் பெற்ற இந்நகரத்தைக் குறிப்பிட இறைவன் அமைத்த இவ்வித்யா சமான எழுத்தமைப்பு இஸ்லாமிய அறிஞர்களுக்கு பல நூற்றாண்டு களாக ஒரு புதிராகவே இருந்து வந்தது. 48:24ல் இறைவன் மக்காவை மக்கா என்ற சரியான எழுத்தமைப்பில் குறிப்பிட்டிருந்தா லும் 3:96ல் ம (மீம்) என்ற எழுத்துக்குப் பகரமாக ப என்ற எழுத்து (பே) பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் 3வது சூரா அலிஃப், லாம், மீம் (அ, ல, ம) என்ற மூன்று எழுத்துக்களை முத்திரை யாகக் கொண்டு துவங்குகிறது. எனவே இங்கு மக்கா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டால் அதில் உள்ள ஒரு மீம் (ம) அதிகமாகி அந்த அத்தியாயத்தின் அற்புதத் கட்ட மைப்பைக் கலைத்து விடும். எல்லாம் வல்ல இறைவன் இவ்வாறு எழுத்தை மாற்றாமலேயே இக்கட்டமைப்பை அமைத்திருக்க முடியும்என்றாலும், இக்கட்டமைப்பு அவரால் அமைக்கப் பட்டதே என்று நம்பிக்கையாளர்களுக்குக் குறிப்பாக உணர்த்து வதற்காகவே இவ்வாறு செய்திருக் கிறார் என்பதை இறை நம்பிக்கை யாளர்கள் உணர்ந்து கொள்ள முடிகிறது அல்லவா?

வழக்கமான அரபி இலக் கணப்படி அல்லாமல், குர்ஆனில் சிலவார்த்தைகள் தனித்தன்மை வாய்ந்த எழுத்தமைப்பில் அமைக்கப் பட்டிருப்பதும் இது இறைவனால் அமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பே என்பதை நமக்குத் தெளிவு படுத்துகிறது. உதாரணமாக 96வது அத்தியாயத்தில் துவக்கத்தில்

உபயோகப்படுத்தப்படும் பிஸ்மி என்ற வார்த்தையும், அவ்வத்தியா யத்தின் முதல் வசனத்தில் உள்ள பிஸ்மி என்ற வார்த்தையும் வேறு விதமா எழுதப்பட்டிருப்பதையும் கவனிக்கவும். மேலும் 'ஸலாத்', 'ஜக்காத்', ஆகிய வார்த்தைகளும், அரபி இலக்கணத்தில் இருந்து மாறுபட்டு ஒரு 'வாவ்' என்ற எழுத்துடன் எழுதப்பட்டிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இத்தகவல் கள் '19' என்ற கட்டமைப்பில் அல்குர் ஆனை அமைத்தது இறை வன் தான் என்பதை நமக்கு குறிப்பால் உணர்த்தவதாக உள்ளது.

வழக்க மான அரபி இலக்கணப்படி இவ்வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கு மானால் இறைவன் அமைத்த இவ்வற்புதக் கட்டமைப்பு கலைந்து போயிருக்கும் என்பதே, இம் மாறுபட்ட எழுத்தமைப்புகள் இறைவனால் அமைக்கப்பட்டது தான் என்பதை நமக்குக் காட்டுகிறது. ஏன் குர்ஆனின் சில வார்த்தைகள் அரபி இலக்கணத்திற்கு மாறுபட்ட அமைப்பில் வித்தியாசமாக எழுதப்பட்டுள்ளன என்ற நீண்ட காலப் புதிருக்கும் நமக்கு விடையளிக்கிறது. ஆம்! அதன்மேல், '19' உள்ள ன. (74:30)

**தொடரும்**

# மனிதனும் விலங்கும்

பரும்பாலும் மனிதர்கள் சுயமாக சிந்திப்பதை விடுத்து ஏற்கனவே இருப்பதையே ஏற்பவர்க ளாவும், அதில் சில மாறுதல்களை செய்து அதையே திரும்பிச் செய்யக் கூடியவர்களாகவுமே இருக்கின்ற னர்.

உதாரணமாக தங்களது உடைகள், வீட்டுச் சுவர்களின் நிறங்கள், தொழில், படிப்பு, பழக்கங்கள் ஏன் தங்களது மீசை, தாடி, தலை முடி வரை பிறறைப் பார்த்துத்தான் செய்து கொள்கின்றனர்.

இதையே மார்க்கத்தில் எடுத்துக் கொண்டால் அங்கும் இதே நிலைமைதான். சுயமாக சிந்திப்பது இல்லை. தங்களது காரியங்களை தாங்கள் மார்க்கமாகக் கருதிச் செயல் படுபவற்றை இறை வேதமான அல்குர் ஆனு டன் ஒத்துப் பார்ப்பதில்லை,உரசிப்பார்ப்ப தில்லை .

தங்களது தாய் தந்தையர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனேகம் பேர் செய்கிறார்கள். எனவே மார்க்கத்தில் நாம் செய்து வருவது சரிதான் என்று நம்பிக் கொள்வது.

தான் நம்பும் ஆலீம்கள், தலைவர்கள் சொல்வது, செய்வது நிச்சயம் தவறாக இருக்காது என்று அதீத நம்பிக்கை கொள்வது இவை எல்லாம் மிகப் பெரும் தவறாகும் நாம் ஒவ்வொருவரும் மறுமையில் தனியனாக, நம் குற்றங்களுக்காக இறைவன் முன் நிறுத்தப்படுவோம் என்பதை உணர்ந்து மார்க்கக் காரியங்களை இறைப்பொருத்தத் தோடு செய்கிறோமா என சிந்திக்க வேண்டும், ஆராய வேண்டும்.

சிந்தனையைத் தூண்டும் நல்ல புத்தகங்களையும், பிரசுரங்களையும் படித்துத் தெளிவு பெற வேண்டும். இறைவன் நாடினால் நல்லுபதேசமும் நல்வழி யும் நம்மைத் தேடிவரும் என்று இறுமாப்புக் கொள்ளாமல் நாம் அவற்றை தேடிச் செல்ல வேண்டும்.

குர்ஆனில் 13 அத்தியாயம் 11-ம் வசனத்தில் இறைவன் கூறுகிறார் :

**"எந்த ஒரு சமுதாயத்தவரும் தம் நிலையைத் தாமே மாற்றிக் கொள்ளாத வரையில் இறைவன் அவர்களை நிச்சயமாக மாற்று வதில்லை"**

தன்னை குழப்பிவிடுவார்கள் என்று தன்மீதும், தன் கொள்கை மீதும் அவநம்பிக்கை கொள்ளாமல். உறுதியோடும், ஆர்வத்தோடும் சத்தியத்தை தேட வேண்டும். சிந்தனையைத் தூண்டும் கூட்டங்களுக்குச் சென்று குர் ஆன் பற்றிய விளக்கங்களை கேட்க வேண்டும். பிரசுரங்களை படிக்க வேண்டும் இறைவனின் சொல்லான அல்குர் ஆனோடு ஒத்துப் பார்க்க வேண்டும்.

விலங்குகளும் நம்மைப்போலவே உண்கின்றன, உறங்குகின்றன. இனவிருத்தி செய்கின்றன. மரணிக்கின்றன. நமக்கும் விலங்குகளுக்கும் என்ன வித்தியாசம்? பகுத்தறிவும், சிந்தனையும்தான் வித்தியாசம்.

மார்க்கம் என்று வரும்போது எல்லோரும் இப்படித்தான் செய்கிறார்கள். முன்னோர்களும் காலம் காலமாக இப்படித்தானே செய்து வருகிறார்கள். அறிஞர்கள் ஆலிம்கள் வழி நடத்துவார்கள் என்று வெறுமெனே இருந்து விடுகிறார்கள்.

நாம் அறிவையும், சிந்தனையையும் உலக விஷயங்களான வியாபாரம், தொழில், பட்டிமன்றம், இலக்கியம் மற்றும் புராணங்களையும் கட்டுக்களையும் ஆராய்வது என்று பலவற்றில் வீணடித்து, தர்க்கம் செய்து பொழுதுபோக்கி காலத்தை கழித்துவிட்டு இறைவன் கொடுத்த பொக்கிஷமான பகுத்தறிவையும், சிந்தனையையும் கொண்டு குர் ஆனை ஆராயாமல் அவற்றை விரயம் செய்கிறோம். குர் ஆனுக்கு எதிராக, முரணாக, முட்டாள்

தனமாக, இருந்தாலும் விலங்குகள் போல் தலையாட்டுகிறோம். ஏற்று நடக்கிறோம். இந்த நிலை மாற வேண்டும், சிந்தியுங்கள்.

இறைவனே நம்மீது பரிதாபம் கொண்டு, தன்னுடைய சொல்லான அல்குர் ஆன் மூலம் , சட்ட திட்டங்களையும் நல்லுரை களையும், எச்சரிக்கை களையும் முன்னோர்களின் சரித்திரங்களில் இருந்து படிப்பினைகளையும் மேலும் வழிகாட்டுதல்களையும் நமக்குக் கொடுத்து அதன்படி நடந்து காட்ட முகம்மது என்ற தூதரையும் நம்மிடமிருந்து தேர்வு செய்து வழிகாட்டினாலும், நாம் ஏன் இவ்வாறு குர் ஆனை தெரிந்த மொழியில் படித்து விளங்காமல், நடக்காமல் இருக்கிறோம். ஏன் நன்றி கெட்டவனாக, அநியாயக் காரனாக இருக்கிறோம் சிந்தியுங்கள். செவிவழிச் செய்திகளும், யூகங்களுமான ஹதீஸ்கள் தப்லீக்காரர்களின் தஃலீம் புத்தகம் மற்றும் எத்தனை லட்சம் புத்தகங்கள் சேர்ந்தாலும் இறைவன் சொல்லான அல் குர்ஆனுக்கு இணையாகாது அறிஞர்க்கு அறிஞர் சொன்னாலும், மேதைக்கும் மேதை சொன்னாலும் மேற்படி யூகங்களையும் இட்டுக் 'கட்டல்களையும் விட்டொழித்து அல்குர்ஆனை ஆராய்ந்து சிந்தித்து விளங்கி நடந்து இறைவனிடம் நேர்வழிக்காக பிரார்த்தனை செய்து ஈடேற்றம் பெறுவோம். அல்லாஹ் போதுமானவர்.

# நீங்கள் இணை வைக்கிறோம் என்பதை அறியாமல் இணைவைப்பவரா?

(கட்டுரையைப் படித்து அறிந்து கொள்ளுங்கள்)

பெரும்பான்மையான இறை நம்பிக்கையாளர்கள் உணர்ந்து கொள்ளாமலேயே இணைவைப்பில் (ஷிர்க்) விழுந்து விடுகிறார்கள். அவர்கள் தாங்கள் இறைவனுக்கு இணை வைக்கிறோம் என்பதையே அறிந்து கொள்வ தில்லை

அனைத்து மக்களையும், நாம் அந்த நாளில் ஒன்று கூட்டும் போது நாம் இணைவைத் தவர்களைக் கேட்போம். அல்லாஹ்வையன்றி நீங்கள் ஏற்படுத்திக்கொண்ட உங்கள் இணையாளரர்கள் எங்கே? அப்போது அவர்கள் கூறும் ஒரே பதில் எங்கள் இரட்சகனாகிய

**தொடர்ச்சி 27ம் பக்கம்**

وَاِنْ كُنْتُمْ فِىْ رَيْبٍ مِّمَّا نَزَّلْنَا عَلٰى عَبْدِنَا فَاْتُوْا
بِسُوْرَةٍ مِّنْ مِّثْلِهٖ وَادْعُوْا شُهَدَآءَكُمْ مِّنْ دُوْنِ
اللّٰهِ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ

فَاِنْ لَّمْ تَفْعَلُوْا وَلَنْ تَفْعَلُوْا فَاتَّقُوْا النَّارَ الَّتِىْ
وَقُوْدُهَا النَّاسُ وَالْحِجَارَةُ ۖ اُعِدَّتْ لِلْكٰفِرِيْنَ

وَبَشِّرِ الَّذِيْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ
جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۖ كُلَّمَا رُزِقُوْا
مِنْهَا مِنْ ثَمَرَةٍ رِّزْقًا ۙ قَالُوْا هٰذَا الَّذِىْ رُزِقْنَا مِنْ
قَبْلُ وَاُتُوْا بِهٖ مُتَشَابِهًا ۖ وَلَهُمْ فِيْهَآ اَزْوَاجٌ
مُّطَهَّرَةٌ ۙ وَّهُمْ فِيْهَا خٰلِدُوْنَ

# Sura 2: The Heifet (Al-Baqarah)

### *Mathematical Challenge*

23. If you have any doubt regarding what we revealed to our servant, * then produce one sura like these, and call upon your own witnesses against **God**, if you are truthful.

### *Allegorical Description of Hell*

24. If you cannot do this - and you can never do this - then beware of the Hellfire, whose fuel is people and rocks; it awaits the disbelievers.

### *Allegorical Description of Paradise*

25. Give good news to those who believe and lead a righteous life that they will have gardens with flowing streams. When provided with a provision of fruits therein, they will say, "This is what was provided for

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

**கணிதச் சவால்**

23. நம்முடைய ஊழியருக்கு* நாம் வெளிப் படுத்தியவற்றைக் குறித்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருக்குமாயின், அப் போது இவற்றைப் போன்ற ஒரு சூராவைக் கொண்டு வாருங்கள், மேலும் நீங்கள் உண்மையானவர்களாக இருந்தால் கடவுள் -க்கெதிராக உங்களுடைய சாட்சிகளை நீங்களே அழைத்துக் கொள்ளுங்கள்.

**உதாரணங்களில் நரகின் வர்ணணை**

24. உங்களால் இதனைச் செய்ய இயலாவிட்டால் மேலும் உங்களால் ஒருபோதும் இதனைச் செய்ய இயலாது - மனிதர்களையும் பாறைக ளையும் எரி பொருளாகக் கொண்ட, அந்த நரக நெருப்பைக் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்; நம்பமறுப்பவர்களை அது எதிர் நோக்கி உள்ளது.

**உதாரணங்களில் சுவனத்தின் வர்ணணை**

25. நம்பிக்கை கொண்டு மேலும் நன்னெறியான தொரு வாழ்வு நடத்துவோருக்கு, அவர்கள் ஆறுகள் பாயும் தோட்டங்களைக் கொண்டி ருப்பார்கள் என்று நற்செய்தி அளிப்பீராக. அங்கிருக்கும் கனிகளைக் கொண்டு ஆகா ரங்கள் வழங்கப்படுகின்ற போது, அவர்கள் கூறுவார்கள், இதுதான் இதற்கு முன்னரும்

us previously." Thus, they are given allegorical descriptions. They will have pure spouses therein, and they abide therein forever.

எங்களுக்கு வழங்கப்பட்டது. இவ்விதமாக அவர்களுக்கு உருவக வர்ணனைகள் கொடுக்கப்படுகின்றன. அங்கே அவர்கள் தூய்மையான வாழ்க்கைத் துணைகளைக் கொண்டிருப்பார்கள், மேலும் அங்கே அவர்கள் என்றென்றும் வசித்திருப்பார்கள்.

إِنَّ اللّٰهَ لَا يَسْتَحْيِۦٓ أَنْ يَّضْرِبَ مَثَلًا مَّا بَعُوْضَةً فَمَا فَوْقَهَا فَأَمَّا الَّذِيْنَ اٰمَنُوْا فَيَعْلَمُوْنَ أَنَّهُ الْحَقُّ مِنْ رَّبِّهِمْ وَأَمَّا الَّذِيْنَ كَفَرُوْا فَيَقُوْلُوْنَ مَاذَآ أَرَادَ اللّٰهُ بِهٰذَا مَثَلًا ۘ يُضِلُّ بِهِ كَثِيْرًا وَّيَهْدِيْ بِهِ كَثِيْرًا وَمَا يُضِلُّ بِهٖٓ إِلَّا الْفٰسِقِيْنَ

26. God does not shy away from citing any kind of allegory*, from the tiny mosquito and greater. As for those who believe, they know that it is the truth from their Lord. As for those who disbelieve, they say, "What did God mean by such an allegory?" He misleads many thereby, and guides many thereby. But He never mis leads thereby except the wicked.

26. சின்னஞ்சிறிய கொசு முதல் அதனை விடப் பெரிய தான எந்த விதமான உதாரணத்தையும்* எடுத்துரைப்பதிலிருந்து கடவுள் வெட்கப்பட்டு விலகிவிடுவதில்லை. நம்பிக்கை கொண்டவர்களைப் பொறுத்த வரை, அது அவர்களுடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியம் என்பதை அவர்கள் அறிவார்கள். நம்பமறுப்போரைப் பொறுத்தவரை, அவர்கள் கூறுகின்றனர், கடவுள் இந்த உதாரணத்தின் மூலம் என்ன கூறநாடுகின்றார்? இதன் மூலம் அவர் பலரை வழி தவறச்செய்கின்றார், மேலும் இதன் மூலம் பலரை வழிநடத்துகின்றார். ஆனால் இதன் மூலம் தீயவர்களைத் தவிர அவர் ஒருபோதும் வழிதவறச் செய்வதில்லை,

الَّذِيْنَ يَنْقُضُوْنَ عَهْدَ اللّٰهِ مِنْۢ بَعْدِ مِيْثَاقِهٖ وَيَقْطَعُوْنَ مَآ أَمَرَ اللّٰهُ بِهٖٓ أَنْ يُّوْصَلَ وَيُفْسِدُوْنَ فِي الْأَرْضِ أُولٰٓئِكَ هُمُ الْخٰسِرُوْنَ

27. who violate **God**'s covenant after pledging to uphold it, sever what **God** has commanded to be joined, and commit evil. These are the losers.

27. அவர்கள் கடவுள்-ன் உடன்படிக்கையைக் கடைப் பிடிப்போமென்று உறுதிமொழி செய்த பின்னர் அதனை மீறுகின்றனர், சேர்த்து வைக்கும்படிக் கடவுள் கட்டளையிட்டவற்றைத் துண்டிக்கின்றனர், மேலும் தீமைகள் புரிகின்றனர். இவர்கள்தான் நஷ்டவாளிகளாக இருக்கின்றனர்.

كَيْفَ تَكْفُرُوْنَ بِاللّٰهِ وَكُنْتُمْ اَمْوَاتًا فَاَحْيَاكُمْ ثُمَّ يُمِيْتُكُمْ ثُمَّ يُحْيِيْكُمْ ثُمَّ اِلَيْهِ تُرْجَعُوْنَ

### *Two Deaths and Two Lives for the Disbelievers**

28. How can you disbelieve in **God** when you were dead and He gave you life, then He puts you to death, then He brings you back to life, then to Him you ultimately return?

### நிராகரிக்கப்பாளர்களுக்கு இரு மரணங்கள் இரு வாழ்க்கை

28. நீங்கள் மரணித்தவர்களாக இருந்தீர்கள், அப்போது அவர் உங்களுக்கு வாழ்வளித்தார், பின்னர் அவர் உங்களை மரணத்தில் ஆழ்த்து கின்றார், பின்னர் அவர் உங்களை மீண்டும் வாழ்வுக்குக் கொண்டு வருகின்றார், பின்னர் அவரிடமே நீங்கள் இறுதியாகத்திரும்ப இருக்கும் போது கடவுள்-ஐ நீங்கள் எவ்வாறு நம்பமறுக்க இயலும்?

هُوَ الَّذِىْ خَلَقَ لَكُمْ مَّا فِى الْاَرْضِ جَمِيْعًا ثُمَّ اسْتَوٰٓى اِلَى السَّمَآءِ فَسَوّٰهُنَّ سَبْعَ سَمٰوٰتٍ وَهُوَ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ

29. He is the One who created for you everything on earth, then turned to the sky and perfected seven universes therein*, and He is fully aware of all things

29. அவர்தான் பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் உங்களுக்காகப் படைத்தவர், பின்னர் வான த்தின் பால் திரும்பி அங்கே ஏழு பிரபஞ் சங்களை முழுமைப்படுத்தினார்,* மேலும் அவர் அனைத்து விஷயங்களையும் முற்றிலும் அறிந்திருக்கின்றார்

وَاِذْ قَالَ رَبُّكَ لِلْمَلٰٓئِكَةِ اِنِّىْ جَاعِلٌ فِى الْاَرْضِ خَلِيْفَةً قَالُوْٓا اَتَجْعَلُ فِيْهَا مَنْ يُّفْسِدُ فِيْهَا وَيَسْفِكُ الدِّمَآءَ وَنَحْنُ نُسَبِّحُ بِحَمْدِكَ وَنُقَدِّسُ لَكَ قَالَ اِنِّىْٓ اَعْلَمُ مَا لَا تَعْلَمُوْنَ

### *Satan : A Temporary “ God”**

30. Recall that your Lord said to the angels, "I am placing a representative (a temporary god) on Earth." They said, "Will You place therein one who will spread evil therein and shed blood, while we sing Your praises, glorify You, and uphold Your absolute authority?" He said, "I know what you do not know.

### ஷைத்தான் : ஒரு தற்காலிக கடவுள் *

30. உம்முடைய இரட்சகர் வானவர்களிடம் கூறி யதை நினைவு கூர்ந்திடுங்கள், பூமியில் ஒரு பிரதிநிதியை (நிலையற்ற ஒரு தெய்வம்) நான் அமர்த்துகின்றேன் அவர்கள் கூறினர், நாங்கள் உம் புகழாரங்களைப் பாடிக் கொண்டும், உம்மைத் துதித்துக் கொண்டும், உம்முடைய ஏகோபித்த அதிகாரத்தை ஆதரித்துக் கொண்டும் இருக்கும் போது, அங்கே தீமைகளைப் பரப்பி, இரத்தம் சிந்தக் கூடிய ஒருவனையா அங்கே நீர் அமைப்பீர்? அவர் கூறினார், நீங்கள் அறியா தவற்றை நான் அறிவேன்.

## FOOTNOTE

* 2:23-24 The Quran's Miraculous mathematical code provides numerous proofs as it speels out the name "Rashad Khalifa" as God's servant mentioned here. Some literary giants, including Al-Mutanabby and Taha Hussein, have answered the literary challenge, but they had no wareness of the Quran's mathematical composition. It is the Quran's mathematical code, revealed through God's Messenger of the Covenant, Rashad Khalifa, that is the real challenge - for it cn never be imitated. See Appendices 1,2, 24, & 26 for the detailed proofs.

*2:26 See Appendix 5 for further discussion of Heaven and Hell.

*2:28 The righteous do not really die; they go straight to Heaven. When their interim on this earth comes to an end, the angels of death simply invite them to go to the same Paradise where Adam and Eve once lived (2:154, 3:169, 8.24, 22:58, 16:32,36:20 27, 44:56, 89:27-30). Thus, while the righteous experience only the first death following our original sin, the unrighteous go through two deaths (40:11). At the time of death, the disbelieves know their miserable fate (8:50, 47:27), then they suffer a continous nightmare that lasts until Hell is created (40:46, 89:23, Appendix 17).

* 2:29 Our univers with its billion galaxies, spanning distances of billions of light years, is the smallest and innermost of seven univesers (Appendix 6). Please look up 41:10-11.

*2:30-37 These verses answer such crucial questions as: "Why are we here?" ((See Appendix 7).

## அடிக்குறிப்பு

*2:23-24 குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியீடு இங்கே கூறப்பட்டிருக்கும், இறைவனுடைய பணியாளரின் பெயரை ரஷாத் கலீஃபா' என்று ஏராளமான ஆதாரங்களுடன் கூறுகிறது. அல் முதனப்பி, மேலும் தாஹா ஹீஸெய்ன் போன்ற சில இலக்கிய ஜாம்பவான்கள் இலக்கியச் சவாலுக்குப் பதிலளித்திருக்கின்றனர். ஆனால் அவர்களுக்குக் குர்ஆனின் கணிதக் கட்டமைப்புத் தெரியாது. மெய்ப்பிக்கும் தூதரான ரஷாத் கலீஃபா அவர்கள் மூலம் வெளிப் படுத்தப்பட்ட குர்ஆனின் கணிதக் கட்டமைப்புதான் உண்மையான சவாலாகும். ஏனெனில் அதைப் போல் ஒருபோதும் செய்ய முடியாது. விரிவான ஆதாரங்களுக்கு பார்க்க (பின் இணைப்பு 1,2,24, மற்றும் 26.) ஆங்கில மொழிபெயர்ப்பின் பின் இணைப்புக்கள்.

* 2.26 சுவனம் நரகம் பற்றிய அதிக சம்பாஷணைகளுக்கு பின் இணைப்பு 5 பார்க்கவும்.

* 2.28 நல்லோர் உண்மையில் மரணிப்ப தில்லை . அவர்கள் நேரடியாகச் சுவனம் செல்லுகிறார்கள். இப்பூமியில் அவர்கள் கெடு முடிவடைந்தவுடன் மரணத்தின் வானவர்கள் அவர்களை ஆதமும் ஹவ்வாவும் ஒரு காலத்தில் வாழ்ந்த அதே சுவனத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். (2:154, 3:169, 8:24, 22:58, 16:32, 36:20-27, 44:56, 89:27-30) இவ்விதம்

நல்லோர் தம் ஆதிபாவத்திற்குப் பின் ஏற்பட்ட முதல் மரணத்தைத் மட்டுமே அனுபவிக்கிறார்கள். தீயவர்களோ இருமுறை மரணமடைக்கிறார்கள். (40:11) மரணத் தருணத்தில் நம்ப மறுத்தவர்கள் தங்கள் தீய . கதியை அறிந்து கொள்வார்கள். (8:50, 47:27) பின்னர் நரகம் படைக்கப்படும் வரை தொடர்ந்த கெட்ட கனவுகளுக்கு ஆளாகின்றனர். (40:46, 89:23, ஆங்கில பின் இணைப்பு 17)

*2:29 கோடானு கோடி ஒளிவருட தூரங்கள் விரிந்த, கோடானு கோடி நட்சத்திர மண்டலங்கள் நிறைந்த நமது இப்பிரபஞ்சமே ஏழு பிரபஞ்சங்களில் சிறியதும் உள்ளடங்கியதுமாகும் (ஆங்கில பின் இணைப்பு 6) அவசியம் பார்க்க 41:10-11)

*2:30-37 இவ்வசனங்கள் மிக முக்கியமான கேள்வியான நாம் ஏன் இங்கே இருக்கிறோம். என்பதற்கு விடையளிக் கிறது.

23ம் பக்கத் தொடர்ச்சி

அல்லாஹ்வின் மீது ஆணையாக, நாங்கள் இணைவைப்பவர்களாக இல்லை ' என்பது தான். அவர்கள் எவ்வாறு தங்களிடமே பொய் கூறிக்கொண்டார் என்பதைக் கவனியும். அவர்கள் ஏற்படுத்தி வைத்த இணைகள் அவர்களைக் கைவிட்டு விடும் என்பதையும் கவனியும். 6:22-24

எனவே தாங்கள் இறைவனுக்கு இணை வைக்கிறோம் என்பதையே அறியாத இணை வைப்பாளர்கள் இவ்வுலகில் உள்ளனர். நீங்கள் அவர்களில் ஒருவரா? நீங்கள் ஒருவராக இல்லை என்பதை எப்படி அறிந்து கொள்வீர்கள்? இது நீங்கள் இணை வைப்பாளர்களில் ஒருவர் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள, உங்களுக்குக் கிடைக்கும் ஒரே சந்தர்ப்பம் ஆகும்.

நாம் ஒரு இணைவைப்பவராக (முஷ்ரிக்) இல்லை என்பதை எப்படி உறுதிப்படுத்திக் கொள்வது? விடையைக் கீழே காணப்படும் வசனம் கூறுகிறது.

உண்மையான முஸ்லிம்களையும் நயவஞ்சகர்களையும் பிரித்துக் காட்ட ஹதீஸ் - மற்றும் சுன்னத் ஒரு அவசியமான சோதனை யாக இருக்கின்றது என்று குர் ஆன் நமக்குப் போதிக்கிறது.

உண்மையான முஸ்லிம்கள் இறைவனையும் அவர், குர்ஆன் முழுமையானது, தெளிவானது, விவரிக்கப்பட்டது என்று கூறுவதையும், நம்புவார்கள். எனவே ஒரு உண்மையான முஸ்லிம் குர்ஆனைத் தவிர வேறு எதையும் மார்க்க ஆதாரமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்.

ஆனால், போலி முஸ்லிம்களோ "குர்ஆன் முழுமை யானதுதான், விவரிக்கப்பட்டதுதான் - ஆனால் இந்த, இந்த விவரங்கள் எல்லாம் அதில் இல்லையே" என்று தங்கள் அவநம்பிக்கையை வெளிப் படுத்துவர். எனவே அவர்கள் ஹதீஸ் மற்றும் சுன்னா ஆகியனவற்றின் பக்கம் ஈர்க்கப்படுவர். இதன் மூலம் அவர்கள் உள்ளங்களில் நம்பிக்கை யில்லாமல் வெறும் வாயளவில், தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத் தும் நயவஞ்சகர்களாக அடையாளம் காட்டப்படுகின்றனர்.

"மனிதர்களிலும், ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை நாம் ஒவ்வொரு நபிக்கும் விரோதி களாக ஆக்கி இருக்கிறோம். ஏமாற்றுவதற்காக, அலங்காரமான சொற்றொடர்களை உருவாக்கிக் கொள்ள அவர்கள் ஒவருக் கொருவர் தூண்டிக்கொள்கின்றனர். உமது இரட்சர் நாடினால் அவர்கள் இவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். மறுமையை நம்பாதவர்களின் உள்ளங்கள் அவற்றைச் செவிமடுத்து அவற்றை ஏற்றுக் கொள்வதற்காகவும், அவர்களின் உண்மையான அடையாளங்களை வெளிப்படுத்துவதற்காகவும். (இது இறைவனின் திட்டப்படியே நடக்கின்றது) (6:112-113)

நீங்கள் குர்ஆனைக் கொண்டு திருப்தி அடைய வில்லையா? நீங்கள் இறைவனை நம்புகிறீர்களா? அல்லது குர்ஆன் முழுமையானது அல்ல என்றும் வழிகாட்ட குர்ஆன் அல்லாத வேறு மார்க்க ஆதாரங்களும் வேண்டும் என்று எண்ணுகிறீர்களா?

# சாத்தான்

## ஒரு மாபெரும் மனோவசியக்காரன்

**சென்ற இதழின் தொடர்ச்சி**

நம் தண்டனை அவர்களைப் பிடித்த போது அவர்கள் இறைவனின் பக்கம் திரும்பி அவரைப் பிரார்த்தித்திருந்தால். ஆனால் அவர்கள் உள்ளங்கள் இறுகி விட்டன. (துளைக்க முடியாத அளவு) மேலும் ஷைத்தான் அவர்களின் காரியங்களை அவர்களுடைய கண்களுக்கு அழகாகக் காண்பித்து விட்டான்.

10. மனோவசியத்திற்கு ஆட்பட்ட நிலையில் அவர்கள் செய்யும் செயல்களுக்குரிய காரணங்கள் என்ன என்று அவர்களிடம் கேட்கப்பட்டால் அவர்கள் தாங்களாகவே அவற்றைச் செய்வதாகவும், அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஏதேனும் ஒரு சாக்கும் கூறுவார்கள். சிலர் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நடக்க வேண்டும் என்று தாங்கள் நிர்ப்பந்திக்கப்படுவது போல் உணர்வதாகக் கூறுவார்கள்.

அவர்கள் பாவகாரியங்களைச் செய்துவிட்டு எங்கள் பெற்றோர் இவ்வாறு செய்வதை நாங்கள் கண்டோம். இறைவன் இதைச் செய்யும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார்', என்று கூறுகிறார்கள் கூறும் : இறைவன் பாவ காரியங்களை ஏவுவதில்லை, இறைவனைப் பற்றி நீங்கள் அறியாதவற்றைக் கூறுகிறீர்களா? (7:28)

இணைவைப்பில் விழுந்து விட்டவர்கள் கூறுவார்கள் இறைவன் நாடியிருந்தால் நாங்களோ எங்கள் மூதாதையர்களோ யாரையும் இணைவைத் திருக்க மாட்டோம். இறைவன் தடுத்ததற்கு மேல் எதையும் (ஹராமாக்கி தடுத்திருக்க மாட்டோம்'. இதற்கு முன்னர் வாழ்ந்த மற்றவர்களும் இவ்வாறே கூறினார்கள். தூதுச் செய்தியை எடுத்துச் சொல்வதைத் தவிர அதிகமாக தூதர்களால் ஏதேனும் செய்ய முடியுமா? (16:35)

11. ஒரு மனோவசியக்காரன், தனக்குக் கட்டுப்பட்டவர்களை, அவர்கள் முன்னர் செய்த காரியங்களை மறுக்கும் படி செய்ய முடியும்.

(மறுமைத் தீர்ப்பு நாளில்) அவர்களின் ஒரே சாக்கு "எங்கள் இரட்சகனாகிய இறைவனின் மேல் ஆணையாக நாங்கள் ஒரு போதும் இணை வைப்பவர்களாக இருந்த தில்லை என்பதே. அவர்கள் எவ்வாறு தங்களிடமே பொய்கூறிக் கொண்டார்கள், என்பதையும், அவர்கள் எண்ணிக்கொண்டிருந்த இணையாளர்கள் அவர்களைக் கைவிட்டு விடுவார்கள் என்பதையும் கவனித்துப்பாரும் (6:22-24)

சரியான அடிப்படையில் இருப்பதாக இப்போது உங்களிடம் சத்தியம் செய்வது போலவே, அவர்கள் அனைவரும் எழுப்பப் படும் நாளில் அவர்கள் இறைவ னிடமும் சத்தியம் செய்வார்கள். நிச்சயமாக அவர்கள் பொய்யர்களே. இறைவனின் செய்தியைப் புறக்கணித்து விடும்படி ஷைத்தான் அவர்களைத் தூண்டி விட்டான். இவர்களே ஷைத்தானின் கூட்டத்தி னர். ஷைத்தானின் கூட்டத்தினர் நாசமடைந்து விட்டார்கள். (58:18-19)

மூஸா நபியின் கைத்தடி பாம்பாக மாறி சூனியக்காரர்களின் போலிகளை விழுங்கிய போது அது இறைவனின் ஒரு மாபெரும் அத்தாட்சி என்பதை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு அந்தச் சூனியக்காரர்களுக்கு, அறிவு இருந்தது. உடனே அவர்கள் மனோவசி யத்திலிருந்து விடு பட்டனர்.

"உம் வலக்கரத்திலிருப்பதை எறியும் அது அவர்கள் செய்த அனைத்தையும் விழுங்கி விடும் அவர்கள் செய்தது சூனிய வித்தையே. சூனியக்காரர்கள் இவ் விஷயத்தில் வெற்றி அடையவே முடியாது. " சூன்யக்காரர்கள் சிர வணக்கத்தில் விழுந்து கூறினார்கள். "மூஸா, ஆரூன் ஆகியோரின் இரட்சகர் மீது நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். (20:69-70)

குர்ஆனில் உள்ள அற்புதக் கணிதக்குறியீடு குர்ஆனைப்பற்றிய அனைத்துச் சந்தேகங்களையும் போக்கி, அது இறைவனிடமிருந்து மனிதகுலத்திற்கு இறக்கிய ருளப்பட்ட முழுமையான இறுதிச்செய்தி தான் என்பதை நிரூபிக்கிறது. இறைவனே அதை 'ஒரு மாபெரும் அற்புதம்' எனவர்ணிக்கிறார். அது யூகங்களுக்கும், தத்துவங்களுக்கும் ஒரு முடிவு கட்டி இஸ்லாத்தை அதன் ஆரம்பத்தில் இருந்த தூய்மையான நிலைக்கு மீட்கிறது.

இது மாபெரும் அற்புதங்களில் ஒன்றாகும். மனிதர்களை உஷார் படுத்தும் ஒரு எச்சரிக்கை யாகும். இதன் அடிப்படையில், நீங்கள் முன்னே செல்வீர்கள். அல்லது பின் செல்வதைத் தேர்ந்தெடுப்பீர்கள். (74:35-37)

துரதிருஷ்டவசமாக, மாபெரும் மனோவசியன் தனக்கு உண்மையாகக் கட்டுப் பட்டவர்களை பின்னோக்கிச் செல்லுமாறு கட்டளை யிட்டுவிட்டான். குர்ஆனின் அற்புதக்கணிதக்குறியிட்டிலிருந்தும் , அதன் செய்தியிலுருந்தும் விலகி ஓடும்படி செய்து விட்டான். விதி வசமாக, இவர்கள் குர்ஆனின் அற்புதக் கணிதக் குறியீட்டை விட்டு விரண்டோடு வார்கள் என்பதைக் குர்ஆனே முன்னறிவிக்கிறது. 'சிங்கத்தைக் கண்ட வரிக்குதிரை களைப் போல" (74:49-51)

புகழ்பெற்ற மலேஷியத் தலைவர் சகோதரர் Dr. காஸிம் அஹ்மது இவ்வற்புதத்தைப் பற்றிய தனது விமர்சனத்தில் முஸ்லிம் உலமாக்களின் அதீத பயத்தை

சரியாக வர்ணித்துள்ளார். ('அரேபியா' ஏப்ரல் - 1985)

கண்கூடாக, இவ்வற்புதக்குறியீடு அவர்களின் மனோவசியம் செய்யப்பட்ட நிலைக்கு ஒரு முடிவுகட்டி அவர்களை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தி அவர்களை இவ்வாறு ஒப்புக் கொள்ள வைக்கிறது. "எனக்குக் குழப்பமாக உள்ளது" எனும் வாசகத்தின் மூலம்.

...மேலும் நயவஞ்சகர்களையும், நிராகரிப்பாளர்களையும் வெளிப் படுத்துவதற்காக. அவர்கள் கூறுவர் இந்த உதாரணத்தின் மூலம் இறைவன் என்ன கூற நாடுகிறார் (குர்ஆனில் உள்ள 19ன் அடிப்படையில் ஆன அற்புதக்குறியீடு)?' ' இவ்விதமாக இறைவன் தான் நாடியவர்களை வழிகேட்டில் விட்டு விடுகிறார். தான் நாடியவர்களை நேர் வழியில் செலுத்துகிறார். (74:31)

(அலிஃப்) அ. (லாம்)ல. (ர) ர. (எழுத்துக்களான) இவை தெளிவான இவ்வேதத்தின் அற்புதங்களின் ஒரு அங்கமாகும். நிராகரிப்பவர்கள் தாங்களும் அடிபணிந்தோராக (முஸ்லிம்களாக) ஆகிவிட ஆசைப்படக்கூடும். (15:1-2)

ஆனால் அவர்கள் மனோவசிய நிலையிலிருந்து வெளியே வர அஞ்சுகிறார்கள். மீள விரும்புவதில்லை. எனவே இறை வேதத்தை நிரூபித்து, அதற்கு உறுதி கொடுக்கும் இறைவனின் அற்புதத்திற் கெதிராக அவர்களின் பலஹீனமான, நம்பிக் கையற்ற துஷ்பிரசாரத்தைப் பிரயோ கிக்குமாறும் அதை மறைக்க முயற்சி செய்யுமாறும் அவர்களின் எஜமான் சாத்தான் அவர்களுக்குக் கட்டளை யிட்டு விட்டான்.

அவர்கள் இறைவனின் ஒளியைத்தங்கள் வாய்களால் ஊதி அனைத்துவிட விரும்புகிறார்கள். ஆனால் இறைவன் தன் ஒளியைப் பூரணமாக்கி விட நாடிவிட்டார். இதை நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் சரியே. (9:32)

மக்களில் சிலர் அதைப்பற்றி அறியாமலேயே இறைவனுக்கு எதிராக வாதிடுகிறார்கள். மேலும் வரம்பு மீறிய ஒவ்வொரு ஷைத்தானையும் பின்பற்று கிறார்கள். (22:3)

தாங்கள் மாபெரும் மனோவசியனால் ஏமாற்றப்பட்டு விட்ட உண்மையை இறைவனின் அற்புதக் குறியீடு அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, எச்சரிப்பதை அவர்கள் அறிந்தே இருக்கிறார்கள். மேலும் அது. அவர்கள் மனோவசியம் செய்யப் பட்டிருப்பதையும் பொய்யான போதனைகளை பின்பற்றி வந்திருப்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

சாத்தானின் மனோவசிய வலையிலிருந்து மீள்வதற்கு உங்களுக்கு உள்ள ஒரே வழி நம்மைப் போன்ற படைப் பினங்களை இறைவனுக்கு இணைவைப்

பதிலிருந்து விலக்கிக் கொள்வது தான். இணைகள் என்பதில் குர்ஆனுக்'கு இணைப்பாக இவர்கள் எதையெல்லாம் ஆக்கி வைத்திருக்கிறார்களோ அவை அத்தனையும் அடங்கும். குர்ஆன் மட்டுமே நபிக்கு இறைவன் அருளிய தூய்மையான இஸ்லாத்தின் போதனைகளாகும்.

(மறுமை நாளில்) தூதர் கூறுவார் "என் இரட்சகரே, என் சமூகத்தார் இந்தக்குர்ஆனைப் புறக்கணித்து விட்டனர் (25:30 )

இஸ்லாத்தை மெய்யாகப் பின்பற்றுபவர்கள் இறைவனின் மீதும், குர்ஆனின் மீதும் மட்டுமே அசைக்க முடியாத, உறுதியான நம்பிக்கை வைத்திருப்பார்கள். அவர்கள் மனோவசியம் செய்யப் பட்டவர்கள் இல்லை. ஏனெனில் அவர்கள் தங்களின் ஒரே இறைவனால் மாபெரும் மனோ வசியக்காரனின் சொற்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

நாம் சாத்தானின் மனோ வசியத்திற்கு ஆட்பட்டிருக்கிறோமா இல்லையா என்பதை அறிந்து கொள்ள ஒரு மாபெரும் அளவு கோலைக் குர்ஆன் தருகிறது.

இறைவன் மட்டுமே கூறப் பட்டால், மெய்யாகவே மறுமையை நம்பாதவர்களின் இதயங்கள் வெறு ப்பினால், சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்கள் சசேர்த்துக் கூறப்பட்டால் அவர்கள் மகிழ்வடைந்து விடுகிறார்கள். (39:45)

சாத்தான் தன்னுடைய முஸ்லிம் சகாக்களுக்குக் குர்ஆன் மட்டும் என்றால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துகிறான். குர்ஆனில் உள்ள எல்லாவற்றையும் நம்புவதற்கு எல்லைகளை வகுத்துக் கொள்ளும்படி கூறுகிறான். இறைவனின் 'அத்தாட்சிகளை மறுக்கும்படி மனிதர்களை அவன் ஏவுகிறான்.

இறைவனின் வார்த்தைகள் மட்டும் பின்பற்றப்பட வேண்டும் என்றாலோ இறைவன் மட்டும் வணங்கப்படவேண்டும் என்றாலோ அதை ஏற்றுக்கொள்வதில்லை என்று முடிவு எடுத்த உடனேயே மாபெரும் மனோவசியன் மனிதர்களின் புத்தியைக்களவு செய்து அவர்களைச் சூறையாடி விடுகிறான். ஷைத்தான் தன்னைப் பின்பற்றுபவர்களைத் தாங்கள் நேரான பாதையில் இருப்பதாக நம்பும்படியும் செய்து விடுகின்றான்.

'ஒரு கூட்டத்தை இறைவன் நேர்வழியில் செலுத்துகிறார். அதே சமயத்தில் மற்றவர்களை அவர் வழி கேட்டில் விட்டு விட்டார். அவர்கள் இறைவனை விடுத்து ஷைத்தான் களைத் தங்கள் பாதுகாவலர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். ஆயினும் அவர்கள் நேரான பாதையில் இருப்பதாகவே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். (7:30)

☆ ★ ☆

# ஹதீஸ்களின் உண்மை நிலை !

நடுநிலையாளர்களும், அறிவுடையோரும் ஹதீஸ்களும் இறைவனிடமிருந்து இறக்கியருளப் பட்ட 'வஹி' தான் என்று வாதிடும் சில ஆலிம்களின் கூற்றோடு கீழ்கண்டக் கட்டுரையை படித்து ஒப்பிட்டு பார்த்து, சிந்தித்து ஆலிம்களின் மோசடியை விளங்கிக் கொள்ளலாம்.

இறைவன் தன்னுடைய முழுமையான விவரிக்கப்பட்ட வேதமான அல் குர்ஆனில் விபசாரனும், விபசாரியும் நூறு கசையடி களால் தண்டிக்கப்பட வேண்டு மென்று கூறுகிறார். (24:1,2,4) தெளிவான குர்ஆனின் இவ்வசனம், குற்றவாளி களை திருமணம் ஆன, அல்லது ஆகாத என்று பிரித்துச் சொல்ல வில்லை.

விபசாரம் செய்தவர் திரு மணமானவராக இருந்தாலும் சரி, திருமணம் ஆகாதவராக இருந்தாலும் சரி, அரபியாகவோ, அல்லது வெள்ளையராகவோ அல்லது கருப்பராகவோ, பணக்காரராகவோ அல்லது ஏழையாகவோ, யாராக இருந்தாலும் அவர்கள் கண்ணால் பார்த்த (நான்கு) சாட்சிகளுடன் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு நூறு கசையடிகள் கொடுக்கப் படவேண்டும் என்று மேற்கூறிய வசனங்கள் கூறுகின்றன.

இதில் விதிவிலக்கானவர்கள் அடிமைகள் மட்டுமே. அவர்களுக்கு சுதந்திரமானவர்களுக்கு உரிய தண்டனையில் பாதி (4:25) இதுவே வார்த்தைகள் தீர்ந்து போகாத இறைவனின் சட்டமாகும். (31:27) அவர் சிறந்த சட்டங்களைத் தருபவர் (5:50) அவர் மறப்பவரில்லை (19:64) மேலும் அவர் குர்ஆனை முழுமையாக விவரிக்கப்பட்ட வேதமாக ஆக்கியிருக்கிறார். (11:1) இது அல்லாத வேறு சட்டங்களைத் தேடுபவர்கள் தூதருக்கு மாறு செய்பவர்களும், அவரின் விரோதி களுமாவர் (6:112-114) நம்பிக்கை கொண்டவர்கள் குர் ஆனைத் தவிர வேறு எதையும் மார்க்க ஆதாரமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் (45:6)

துரதிருஷ்டவசமாக முஹம்மத் நபியின் மறைவுக்குப்பின் நயவஞ்சகர்கள் ஹதீஸ்களை இட்டுக் கட்டி அவற்றுக்கு நபியின் பெயரை உபயோகப்படுத்தி இறைவனின் சட்டங்களைச் சிதைத்தனர். 6;112ம் வசனத்தில் குறிப்பிடப்படும் மக்கள் திருமண மானவர்களின் விபசாரத்திற் குரிய தண்டனை யாக அவர்களைக் கல்லால் அடித்துக்கொல்ல வேண்டும்

என்று விரும்பி அதற்காகப் பொய்க்கு மேல் பொய்யாக இட்டுக்கட்டி இறைச் சட்டத்தை மாற்ற முயன்றனர். அவர்கள் இந்தச் சட்டத்தை யூதர்களிடமிருந்தும், தங்களுடைய இணை வைத்து வணங்கிய முன்னோர்களிடமிருந்தும் பெற்றனர். (11;91, 44:20; 36:18; 26:116) இதன் மூலம் இறைவனின் வார்த்தைகள் முழுமையானவையும், தெளிவானவையுமல்ல என்று மறை முகப் பிரகடனம் செய்தனர்.

எல்லாம் வல்ல இறைவன் இச்சட்டத்தைக் கூறும் வசனங்களிலேயே (24:1) தனது சட்டம் தெளிவானது என்று கூறுவது இங்கே நினைவு கூறத்தக்கது.

இறைவனின் வார்த்தைகள் வெறுமையாகவும், பல பொருள் கொள்ளக் கூடியதாகவும், குழப்பம் தரக்கூடியதாகவும் உள்ளன என்று கூறி ஷியா மற்றும் சுன்னி அறிஞர்கள் இறை வசனங்களை சிதைப்பதற்கும், துஷ்பிரயோகம் செய்வதற்கும் ஷைத்தானுக்குரிய வாயிலைத் திறந்து விட்டனர்.

நாஸிக், மன்ஸீக், (மாற்றியது, மாற்றப்பட்டது) என்ற ஒரு கருத்தை அறிமுகப் படுத்தி, சில குர் ஆன் வசனங்கள், வேறு சில குர் ஆன் வசனங்களாலோ, ஹதீஸ்களாலோ மாற்றப்பட்டு விட்டதாக கூறினர். இக்கருத்தின் மூலம் தங்களுக்குப் புரியாத அல்லது இஷ்டத்திற்கு ஒத்து வராத , ஹதீஸ்களுக்கு முரணான வசனங்கள் மாற்றப்பட்டு விட்டதாக அறிவிக்க ஆரம்பித்தனர். ஆனால் வழக்கம் போலவே எத்தனை வசனங்கள் மாற்றப்பட்டன என்பதில் கருத்து வேறுபாடு கொண்டு சண்டையிட்டுக் கொண்டனர். சிலர் 5 வசனங்கள் என்பர், சிலர் 20 என்பர், சிலர் 50 என்ப ர்.......

## ஆடு தின்றதால் மாற்றப்பட்ட வசனம்.

அரபு இணைவைப்பாளர் கள் ஹதீஸ்களை இட்டுக்கட்டிக் கூறி முஹம்மத் நபி ஒரு விபசாரனையும், விபசாரியையும் கல்லால் அடித்துக் கொல்லும்படி ஏவினார் (மைஸ், மற்றும் கமிதிய்யா) என்றனர்.

24:1,2 ஆகிய தெளிவான வசனங்களை மாற்றுவதற்கு ஹதீஸ்கள் மட்டும் போதாது என்று உணர்ந்த அவர்கள் கல்லால் அடித்துக் கொல்லும்படி கூறும் ஒரு வசனத்தையும் உருவாக்கி இறைவன் கூறியதாகக் கூறினர். அவர்கள் அந்த சாத்தானிய வசனத்தையும் குர் ஆனுக்குள் நுழைக்க முயன்றனர். அவர்களால் அது முடியாமல் போன போது 10:100ல் வர்ணிக்கப்படும் மக்கள் மட்டுமே நம்பக் கூடிய முட்டாள்தனமான கட்டுக் கதைகளை உருவாக்கினர்.

அவர்கள் கதையின்படி, மேற்படி வசனம் முஹம்மத் நபியின்

காலத்தில் குர் ஆனில் பதியப்பட்டிருந்ததாகவும், ஆனால் அவர் மறைந்த சில நாட்களுக்குள் ஆயிஷா வின் வீட்டுக்குள் நுழைந்த ஒரு ஆடு கல்லாலடித்துக் கொல்லும் படி கூறிய வசனம் எழுதிய அந்தப் பகுதியைத் தின்று விட்டதாகவும் கூறினர்.

எனவே அந்த வசனம் குர்ஆனில் இடம் பெறவில்லை யென்றும் கூறினர். இக்கதை இப்னுமாஜா - நிகாஹ் 36/1944, இப்னுஹன்பல் 5/131, 132, 183; 6/ 269 ஆகிய ஹதீஸ் தொகுப்புக்களில் இடம் பெறுகிறது.

பாதுகாக்கப்பட்ட, முமையான வேதத்தில் முஹம்மத் நபியின் காலத்தில் பதியப்பட்டிருந்த வசனங்கள் எப்படி ஒரு ஆட்டால் மாற்றப்பட்டிருக்கும்?

இக்கேள்விக்குப் பதிலாக இப்னுகுதைபா என்ற புகழ்பெற்ற ஹதீஸ் கலை வல்லுனர் 'ஹதீஸ்களின் முரண்பாடுகளை நீக்கும் கலை' என்ற பெயரில் தான் எழுதிய புத்தக மொன்றில் கூறுகிறார். ஏன் இறைவனின் வல்லமையை நம்பக்கூடாது? அவன் ஆது, சமூது, கூட்டத்தாரை அழித்தது போலவே, ஒரு ஆட்டை உபயோகப்படுத்தி தன் வசனங்களை அழிக்க முடியாதா என்ன? மேலும் அவர் கூறுகிறார் ஆடு ஒரு புனிதமான விலங்கு!

**உமர் ஒரு நயவஞ்சகரா?**

இறைவனின் மேலும், தூதரின் மேலும் அவதூறு கூறும் இந்நயவஞ்சகர்கள் தங்களின் ஒரு பொய்க்குத் துணையாக மற்றப் பொய்களை உருவாக்கினர்.

கீழ்கண்ட வாசகத்தை உமர் கூறியதாக இவர்கள் இட்டுக்கட்டிக் கூறி கலீஃபா உமரை அவதூறு செய்கிறார்கள். "எதிர்காலத்தில் சிலர் கல்லால் அடித்துக் கொல்லும் தண்டனை குர் ஆனில் கூறப்பட வில்லை. எனவே அது கூடாது என்று மறுப்பார்கள். உமர் குர் ஆனில் அதிகம் சேர்த்துவிட்டார் என்று மக்கள் என் மீது பழி கூறுவதை நான் அஞ்சாமலிருந்தால் கல்லால் அடித்துக் கொல்லும்படி கூறும் இவ்வசனத்தை நான் குர் ஆனில் சேர்த்திருப்பேன்." இப்பொய் புகாரி 93/21, முஸ்லீ ம்; (ஹீதூத்) 1691, திர்மிதி (ஹீதூத்) 8/1431, அபூதாவுத் 41/1, இத்கான் 2/312 ஆகிய அனைத்து ஹதீஸ் தொகுப்புகளிலும் பதியப் பட்டுள்ளது. (எனவே உமர் மக்களை அஞ்சாமல், இறைவனை அஞ்சியிருந்தால் கல்லால் அடித்துக் கொல்லும்படி கூறும் இவ்வசனம் அனைத்து ஹதீஸ் தொகுப்புக்களிலும் ஆடு தின்ற வசனம்' என்ற பெயரில் பதியப்பட்டிருக்காது அல்லவா?

ஹதீஸ் கலை அறிஞர்கள் இத்துடன் திருப்தி அடைந்து விட வில்லை . ஒரு வகைக் குரங்குக் கூட்டம், விபசாரம் செய்த ஒரு குரங்கைப் பிடித்து கல்லாலடித்து கொன்றன என்று ஒரு ஹதீஸீம்

புகாரியில் பதியப்பட்டுள்ளது. (63/27). ஹதீஸ்களையும், சுன்னத்தையும் பின்பற்றுவதற்கு முன்னோடிகளாக்குவதற்காக குரங்குகளைக் கேவலப் படுத்தும் இவர்களைப் பற்றி இறைவன் குர் ஆனில் 2:65, 7:179 ஆகிய வசனங்களில் விவரிக்கிறார்.

பொய்யைத் தொழிலாகக் கொண்ட இவர்கள் மற்ற நம்பிக்கையாளர்களையும் விட்டு வைக்கவில்லை. உமைய்யா, மற்றும் அப்பாஸிய அரசின் மார்க்க அதிகாரிகள் அபூ ஹனிஃபாவை, ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ள மறுத்ததற்காகவும், குர்ஆன் மட்டும்தான் மார்க்க ஆதாரம் என்று கூறியதற்காகவும் அவரைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்தார்கள். அவர் மக்கள் மத்தியில் பிரபலமானவராகவும், மதிப்பிற்குரியவராகவும் இருந்தார். எனவே, அவர் மறைவுக்குப் பின் அவ்வதிகாரிகள் தங்களின் மார்க்கத் தீர்ப்புகளுக்கு அபூ ஹனிஃபாவின் பெயரைப் பயன்படுத்தினர். இறுதியில், ஒரு முழு சுன்னி பிரிவு அவர் பெயரால் இட்டுக்கட்டப்பட்டது.

இவ்வாறாகக் கல்லாலடித்துக் கொல்லும்படி கூறும் சட்டத்தில் உள்ள குளறுபடிகளைச் சுட்டிக்காட்டி தமிழகத்தில் உள்ள பிரபல மார்க்க அறிஞர்களிடம் பேசியபோது அவர்கள் இதெல்லாம் இப்போது நாம் இங்கே யோசிக்க வேண்டிய பிரச்சினைகள் இல்லை. இவை ஒரு இஸ்லாமிய நாட்டில் யோசிக்க வேண்டிய விஷயங்கள் நாம் நமக்குக் கூறப் பட்டதைச் செய்து கொண்டு போக வேண்டியது தான் என்றார்கள். இதன் மூலம் அவர்கள் சிலரின் கவனத்தையும் திசை திருப்பிவிட்டார்கள்.

ஆயினும் இச்சட்டங்களைப் பின்பற்றி மிகச்சமீபத்தில் 1978ல் விபசாரம் செய்ததாகக் கூறப்பட்ட ஸவூதி அரசின் இளவரசி கொல்லப் பட்டது நாம் அனைவரும் அறியாத ஒரு உண்மை . (அவசியம் பார்க்க 6:137) ஸவூதி அரசாங்கம் பின்பற்றும் அதே "ஸஹீஹான" (உண்மையான?) ஹதீஸ்களை - மட்டுமே இவர்களும், மார்க்கம் என்று இங்கே பிரசாரம் செய்கிறார்கள் என்பதை நாம் நினைவு கூற வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட சில ஹதீஸ்களை (பலஹீனமானது) 'ளயீஃப்' என்று சில 'அறிஞர்கள்' கூறுவார்கள். ஆனால் உண்மை யானது என்று பதியப்பட்ட ஹதீஸ்களின் நிலை என்ன? என்று கேட்டால் அல்லது அவற்றில் உள்ள முரண் பாடுகளைச் சுட்டிக்காட்டினால் இந்த அறிஞர்கள் கேள்வி கேட்பவர்களை விட்டும் வெருண்டோடுவதைக் காணலாம். (74:49-52)

**இன்ஷா அல்லாஹ் தொடரும்.**

☆ ★ ☆

# வெற்றிக்கு வழி

1. விசுவாசிகளுக்கும் 2. யூதர்கள் 3. ஸாபியீன்கள் 4. கிறிஸ்தவர்கள் 5. மஜூஸிகள் 6. இணை வைத்து வணங்கு வோர் ஆகிய இவர்களுக்கும் இடையில் நிச்சயமாக அல்லாஹ் மறுமை நாளில் தீர்ப்புக் கூறுவார். யாவற்றிற்கும் அல்லாஹ் சாட்சியாக இருக்கிறார் (22:17)

வல்ல அல்லாஹ் மனித சமுதாயத்தின் பிரிவுகளை வசனம் 22:17-ல் நமக்குச் சுட்டிக் காட்டுகிறர். இந்தப் பிரிவுகளில் யூதர்களும் கிறித்தவர்களும் யாவர் என்பதை நாம் நன்கறிவோம். ஸாபியீன்கள் எனப்படுபவர் கள் இந்துக்கள் என்பதாக வரலாற் றுக் குறிப்புகளில் அறிகிறோம். மஜூஸிகள் பாரசீக மதத்தைச் சார்ந்தவர்கள் ஆகுவர். இணை வைத்து வணங்குவோர் இந்த நான்கு பிரிவுகளிலும் இருக்கின்றனர். இறைவன் சுட்டிக் காட்டும் பிரிவுகளில் நாம் எந்தப் பிரிவினரைச் சேர்ந்தவர்களாக இருக்கிறோம்? எந்தப் பிரிவினராக இருக்க விரும்புகிறோம்?

நாம் உண்மையாகவே இறை நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தோமானால் இறைவன் முதலாவதாகக் குறிப்பிடும் 'விசுவாசிகள்' என்ற பிரிவினராக இருப்பதையே தேர்ந்து எடுத்துக் கொள்வோம். இவ்வாறாக நாம் தேர்வு செய்கிறோம் எனில் இவ்வுலகில் நமக்கு அளிக்கப்பட்டி ருக்கும் வாழ்வில் மறுமைக் கான பயனுள்ள காரியங்களை நன்கு அறிந்து அவற்றைச் செயலாக்கும் முயற்சியில் ஈடுபடவும் வேண்டும் அல்லவா? இதற்கான வழிமுறைகளை நாம் எவ்வாறு அறிந்து கொள்வது? இதற்கு இறுதி இறைவேதமான அல்குர்ஆன் தெளிவான வழி முறைகளை விவரித்துக் கூறுகிறது. இங்கு நாம் குறைந்தபட்சமாக என்ன செய்யக் கூடாது என்பதையும் அதிகபட்சமாக எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் காணபோம்.

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டார். இதனைத் தவிர எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பார். எவர் அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்றார்களோ, அவர்கள் நிச்சயமாக மிகப் பெரும் பாவத்தையே கற்பனை செய்கின் றனர். (4:48)

மேற்கூறிய வசனத்தில் நாம் இறை மன்னிப்பைப் பெறுவதற்குரிய மிகக் குறைந்த பட்சமாக ஒரு திட்ட அளவுகோல் கூறப்படுகிறது. 'இணை வைத்தல்' என்பது மன்னிக்கவே முடியாத குற்றமாக இறைவனால் கூறப்படு கிறது. இந்த திட்ட அளவுகோல் கொண்டு நம்மை நாமே பரிசீலித்துக் கொள்ள வேண்டியது உண்மையான இறை நம் பிக்கை கொண்ட ஒவ்வொருவருக்கும் மிக மிக இன்றியமையாத செயல் ஆக இருக்கிறது.

முதலில் இணைவைத்தல் என்றால் என்ன? நாம் எவ்வாறெல்லாம் நம்மை அறியாமலே இணைவைப்பில் மூழ்கியிருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முயற்சி செய்வோம். அதற்கான சில எளிய உதாரணங்களைக் காண்போம்.

1. நாம் நமக்காக இவ்வுலகத் தேவைகளை நாடி இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம் என்பதாகக் கொள்வோம். உதாரணமாக, ஒருவர் குழந்தை வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றார். வல்ல இறைவனது அருளால் குழந்தையும் பிறக்கின்றது. இப்போது அவர் தன் இறைவனை நாடி நின்றதையும் இறைவனது அருளுக்காக அவரைக் கண்ணியப்படுத்துவதையும் விட்டு விட்டு அந்தக் குழந்தையின் நினைவாகவே அதிகமான நேரத்தைச் செலவிடுகிறார்கள் எனில், இது 'இணை வைத்தல்' ஆகும். அவர் இறை சிந்தனைக்குப் பதிலாகத் தன் குழந்தையை சிந்தனையில் எடுத்துக் கொள்கின்றார், என்பதால் இது ஷிர்க் ஆகி விடுகின்றது. ஒரு நோயாளி டாக்டரிடம் செல்கின்றார். வல்ல இறைவனை நாடிப் பிரார்த்திக்க நோய் குணமாகின்றது. இவர் இந்த டாக்டர்தான் என் நோயைக் குணப் படுத்தினார் என்கிறார். இதுவும் 'இணை வைத்தல்' ஆகும். இவ்விரு உதாரணங்களிலும் அவர்கள் இறைவனைப் பிரார்த்திக்கா விட்டாலும் கூட, அவர்களது தேவைகளை இறைவன் மட்டுமே பூர்த்தி செய்கின்றார் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார் களானால், அவர்கள் வெற்றி யடைந்து விட்டனர். ஒருநாளில் அதிகமான நேரம் உங்கள் சிந்தனையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஒன்று உங்களை இணை வைப்பிற்கு அழைத்துச் சென்று விடும். அந்த ஒன்று உங்கள குழந்தையாகவோ, செல்வம், வீடு, தோட்டம், பொன், வெள்ளி இவையாகவும் இருக்க லாம்.

என் குழந்தை என்று பெருமிதப்பட்டுக் கொள்ளவோ,

என் வீடு எனது சம்பாத்தியம் என்று கர்வம் கொள்ளவோ, எனது தோட்டம் நானே விளையச்

செய்தேன் என்று இறுமாப்புக் கொள்வதோ தன்னையே இறைவனுக்கு இணையாக்குவதாகும்.

இவ்வுலக வாழ்வின் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் நாம் இறைவனை நினைவுகூற வேண்டிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. உதாரணமாக, நமது வீட்டுத் தொட்டியில் பூக்கும் மலர், கனிவகைகளில் உள்ளமைப்பு, பயணத்தின் போது கவனிப்பாரற்ற நிலங்களில் வளர்ந்து நிற்கும் மரங்கள் இன்னும் எண்ணற்ற படைப்புகளில் இறைவனை நினைந்து வியக்கும் வாய்ப்புகள் உள்ளன. வளர்ந்து விட்ட நவீன விஞ்ஞானத்தினால் தடுக்க முடியாத பேரழிவுகள், நம்மால் நினைத்துப் பார்க்க முடியாத விதங்களில் நோய்கள், விபத்துக்கள் இவற்றிலும் இறைவனைச் சிந்தித்து உணரும் வாய்ப்புகள் உள்ளன.

2. இவ்வுலகத் தேவைகளுக்காக மனிதர்களை எதிர்பார்த்தல், இதுவும் ஒரு இணைவைத்தல் ஆகும். இங்கு ஒரு விஷயம் நினைவில் கொள்ள வேண்டும். இறைவன் மனிதர்கள் மூலமாகவே நமக்கு உதவிகள் செய்வார். நமது தேவைகளை நிறைவேற்றுவார். நாம் இறைவனை மட்டுமே வேண்டி நின்றால் நமது ஒவ்வொரு தேவையையும் நிச்சயமாக இறைவன் நிறைவேற்று வார் மிகுந்த உறுதியுடன், பொறுமையுடன் இறைவனை நாடி நின்றோமானால் வல்ல அல்லாஹ் நமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார்.

3. இறைவனைத் தவிர மற்ற விஷயங்களையும் நமது இறை வணக்கத்தில் சேர்த்துக் கொள்ளுதல், இது ஒரு மாபெரும் இணை வைத்தல் ஆகும். இன்றைய முஸ்லிம்கள் துரதிர்ஷ்ட வசமாக இத்தகைய இணைவைப்பில் ஈடுபட்டிருக்கிறனர். தாங்கள் இணை வைக்கிறோம் என்பதை அறியாதவர்களாகவும் இருக்கின்றனர். தூய்மையான இறை வணக்கம் என்பது இறைவனை மட்டுமே சிந்தனையில் கொண்டு செய்யப்படுவதாகும்.

இந்த இறைவணக்கத்தின் போது நம்மைக் கொண்டு எந்தவிதத் தேவையும் அற்ற, சுவனவாசிகளாக இறைவனால் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுவிட்ட நபிமார்களை இணைத்துக் கொண்டு இவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யும் விதமாகத் தொழுது கொண்டிருக்கிறோம். அவர்களோ சுவனவாசிகள். அவர்களுக்காக, சுவனமா? நரகமா? என்ற சந்தேகத்தில் ஆழந்து கிடக்கும் மற்றவர்கள் பிரார்த்திப்பது பயனளிக்குமா? சிந்திக்கவும். இவ்வாறான செய்கை ஓர் இணை வைத்தல் ஆகும். இறை வனைத்தொழுதுகொண்டிக்கையில்,

மற்றவர்களை அழைப்பது இறைவனுடன் அவர்களும் இருப்பதாகக் கொள்வதாகும். இதனால் தூய்மையான தொழுகை பாழ்படுத்தப்பட்டு விடுகிறது. இவர்கள், இறைவன் குறிப்பிட்டுக் கூறிய, (4.48) மிகக் குறைந்த அளவுத் திட்டத்தின் கீழ் வராதவர்கள் ஆவர். இந்தத் திட்ட அளவின் கீழ் வராதவர்கள் இறை மன்னிப்பைப் பெறவே முடியாது. மேலும், அவர்கள் நரகவாசிகளாகி விடுகின்றனர்.

வசனம் 2:8 கூறுவதைக் கவனியுங்கள்.

**அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டிருக் கிறோம் என்று அவர்கள் கூறுகின் றனர். ஆனால் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர். (2:8)**

இத்தகையோர் பற்றி, அவர்கள் மறுமையில் இறைவன் முன்பும் இதே போல் தான் கூறுவார்கள் என்பதாக வசனம் 6:22-23ல் அறிகிறோம்.

6:22 நாம், இவர்கள் யாவரையும் ஒன்று சேர்க்கும் நாளில் இணை வைத்து வணங்கியோரை நோக்கி, "நீங்கள் இணை வைத்து வணங்கியவை எங்கே?" என்று நாம் கேட்போம்.

6.23 அவர்கள், "அல்லாஹ் தான் எங்கள் இறைவன். நாங்கள் இணையாக்க வில்லையே!" என்று பொய் கூறுவதைத் தவிர வேறொன்று மிராது. சிந்தித்து உணரக் கூடிய உண்மை இறை நம்பிக்கையாளர்கள் தீயை மிதித்தவர் போல விரைவாக இத்தகைய இணை வைப்புகளை விட்டு விலகிக் கொள்வார்கள்.

ஒரு மனிதன் எத்தகைய பயமோ, துக்கமோ இன்றி மகிழ்ச்சியுடன் இறைவனைச் சந்திக்கவும் ஒரு அதிகபட்சமான அளவுத்திட்டத்தினை, இறைவன் வசனம் 2:11ல் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றார்.

**எவன் நன்மை செய்து, தன்னை அல்லாஹ்வுக்கு அர்ப் பணம் செய்து விடுகிறானோ அவனுக்கே அவனுடைய கூலி, அவனுடைய இறைவனிடம் உண்டு, அன்றி இத்தகையோருக்கு எத்தகைய பயமுமில்லை . அவர்கள் துக்கப் படவும் மாட்டார்கள். (2.112)**

இறைவனுக்கே தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொள்ளுதல் என்பது இந்தத் திட்ட அளவாகும். இவ்வுலக ஆதாயங்க ளுக்காக வாழ்வை அமைத்துக் கொள்ளாமல் மறுமையைக் கருதி இறை வழியில் செல்வதாகும். இதற்கான வழி முறைகளை அல்குர் ஆன் நமக்குத் தெளிவாக விவரிக்கிறது.

குர்ஆன் குறிப்பிட்டுக் கூறியுள்ள நன்மையான காரியங் களைக் கவனித்து அறிந்து கொண்டு, அவற்றைச் செயலாக்கவும், தீமை யான காரியங்களைக் கவனித்து அறிந்து கொண்டு அவற்றிலிருந்து விலகிக் கொள்ளவும் வேண்டும். இத்தகையோருக்கே, இம்மையிலும் மறுமையிலும் வெற்றியும் கௌரவமும் இறைவனால் வாக்களி க்கப்படுகின்றது.

10.62 அல்லாஹ்வைச் சார்ந்தவர்களுக்கு நிச்சயமாக யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

10.63 அவர்கள் நம்பிக்கை கொண்டு பயந்தும் நடந்து கொள்கின்றனர்.

10.64 இவ்வுலக வாழ்விலும், மறுமையிலும் அவர்களுக்கு நன்மாராயமுண்டு. அல்லாஹ்வுடைய வாக்குறுதிகளில் எவ்வித மாறுதலுமிருக்காது. இதுவே மகத்தான பெரும் பாக்கியமாகும்.

அல்குர் ஆன் 10:62-64

இதே கருத்துடைய வார்த்தைகள் இந்துக்களின் வேதத்திலும் இடம் பெற்றிருக்கிறது என்பதையும், அவர்களில் உள்ள வேதம் கற்றவர்கள் இவ்வசனத்தின் பொருள் அறிந்திருக் கின்றனர் என்பதையும் கீழ்க்காணும் செய்தியில் அறிந்து கொள்ளலாம். அல்குர் ஆன் அனைத்து வேதங்களையும் பாதுகாப்பதாக இருக்கிறது என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

நவம்பர் 28, 1999

தினமலர் - வாரமலரில் 'அறிவோமா ஆன்மீகம்' பகுதியில் இடம் பெற்ற செய்தி.

கேள்வி நவவித பக்தியில் 'ஸ்மரணம்' என்ற சொல் இடம் பெறுகிறதே. அதன் பொருள் என்ன?

பதில் : இறைவனையே இடைவிடா மல் நினைத்தால் 'ஸ்மரணம்' இது பரகதிக்கு நிச்சயமான வழியாகும்.

சுவாமி கமலாத்மானந்தா
ஸ்ரீராம கிருஷ்ண மடம்.

ஒரு குழந்தையைத் தாய் கோபம் கொண்டு விரட்டினாலும் அக்குழந்தை தாயைவிட்டு விலகிவிடு வதில்லை. மாறாக மேலும் இறுக்கமாகத் தாயைப் பற்றிக் கொள்ளவே செய்யும். அதைப்போல், நாமும் இவ்வுலக வாழ்வில் எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் அது தன்னால்தான் நேர்ந்தது என்பதையறிந்து இறைவனை மட்டும் இறுகப் பற்றிக் கொள்வோமானால் வெற்றிக்குறிய வழியை நாம் அடைந்து விடலாம்.

☆ ★ ☆

# முஹம்மத் நபியை வெறுப்பவர்கள் யார்?

இறுதி நபி முஹம்மது உல்குக் குப்பெற்றுத்தந்த அல்குர் ஆனை மட்டும் பின்பற்றுபவர்கள் நிச்சயம் முஹம்மத் நபியை வெறுப்ப வர்களாக இருக்க முடியாது. ஆனால் இறைவன் முஹம்மத் நபியைப் பற்றிக் குர்ஆனில் நமக்குக் கூறும் விஷயங்களை நாம் திரும்பக் கூறினால் ஷைத்தானியக் கண்டுப் பிடிப்புக்களான ஹதீஸ்களைப் பின்பற்றுபவர்கள் 'அல் குர்ஆனை மட்டும் பின்பற்றுபவர் களைப் பார்த்து முஹம்மத் நபியை வெறுப்பவர்கள்' என்று குற்றம் சுமத்துகிறார்கள்.

இதைப்போலவே கிறித்து வர்களும், இயேசு ஒரு மனிதர் தான், அவர் இறைவனின் மகனல்லர், இறைத்தூதர் மட்டுமே என்று நாம் கூறினால் அவர்கள் 'நீங்கள் இயேசுவை வெறுக்கிறீர்கள் என்று குற்றம் சுமத்துகி றார்கள்.

**முஹம்மத் நபியால் தான் விரும்புபவர்களையெல்லாம் நேர்வழியில் செலுத்தி விட முடியாது (28:56)**

நிச்சயமாக நீர் விரும்புபவர் களை எல்லாம் உம்மால் நேர்வழியில் செலுத்திவிட முடியாது. இறைவன் தான் அவர் நாடியவர்களுக்கெல்லாம் நேர்வழி காட்டுவார். ஏனெனில் நேர்வழிக்குத் தகுதியானவர்கள் யார் என்பதை அவரே நன்கறிவார். (28:56)

இயேசுவை மெய்யாக நேசிப்பது என்பது அவர் ஒரு மனிதரே, இறைத்தூதர் மட்டுமே என்று ஏற்றுக் கொள்வதே ஆகும். கிறித்துவர்கள் இயேசுவை மிகவும் அளவு கடந்து நேசிக்கிறார்கள். ஆயினும் மறுமை நாளில் அவர்களை இயேசு, கைவிட்டு விடுவார். (மத்தேயு 7:23; அல்குர்ஆன் 5:116)

அவ்வாறே, முஹம்மத் நபியை நேசிப்பது என்பது அவர் நம்மைப் போன்ற ஒரு மனிதரே, இறைத்தூரதர் மட்டுமே என்று உணர்ந்து அவர் கொண்டு வந்த போதனைகளைப் பின்பற்றுவதே. அதாவது அவர் தன் அங்கீகாரத்துடன் நமக்குத்த தந்த அல்குர்ஆனை மட்டும் பின்பற்று வதும் அது அல்லாத வேறு எதனையும் பின்பற்றாமல் இருப்பதுமே ஆகும். ஹதீஸ்களைப் பின்பற்றுபவர்களையும், பிரசாரம் செய்பவர் களையும் முஹம்மத் நபியின் விரோதிகள் என்று குர்ஆன் கூறுகிறது (6:112,113) அவர்களை , குர்ஆனை மட்டும் பின்பற்றாத அவர்களை முஹம்மத் நபி மறுமை நாளில் கைவிட்டு விடுவார் என்றும் கீழே காணப்படும் இறை வசனம் கூறுகிறது.

(மறுமை நாளில்) "தூதர் கூறுவார் என் இறைவா! என் சமூகத்தார் இந்தக் குர்ஆனைப் புறக் கணித்து விட்டார்கள்... இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும் எதிராக குற்றவாளிகளை நாம் விரோதிகளாக ஆக்கி இருக்கிறோம். வழிகாட்டவும், உதவி செய்யவும் உமது இறைவன் போதுமானவர். (25:30-31)

ஹதீஸ்களைப் பற்றிக்குறிப்பிடும் வசனம் 6:112க்கும், மேற்கண்ட வசனத்திற்கும் 'வார்த்தைக்கு வார்த்தை' உள்ள ஒற்றுமையைக் கவனிக்கவும்! ★

# குர்ஆன் மட்டும் போதாதா? அல்முபீன்-கேள்விளுக்கு

## பதில்கள்

சென்ற இதழ்களில் அல்முபீன் எழுப்பிய சில கேள்விகளுக்குப் பதில்களையும், அவர்கள் எடுத்த வைத்த வாதங்களில் இருந்த கோளாறுகளையும், கண்டோம். அவர்களின் மற்ற சில கேள்விகளை இவ்விதழில் காண்போம். அல்முபீன் வாசகர்களில் நியாய உணர்வுடைய வர்கள் அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஹதீஸ்களின் அடிப்ப டையில் அவர்களின் பதில்களையும், நமது பதில்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். (இவர்களின் பதில்களை இதே ஹதீஸ்களை நம்பும் மத்ஹபு மவ்லவிகள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அந்நஜாத் ஆசிரியர் இதேகேள்விகளுக்கு ஹதீஸ்களின் அடிப்படையில் வேறு' ஒரு பதில், கூறுவார், அஹ்ல ஹதீஸ் ஜமா அத்தினர் 'வேறு' பதில்கள் கூறுவர். அல்லாஹ்வுக்கும், அவருடைய வசனங்களுக்கும் பின்னர் இவர்கள் வேறு எந்த ஹதீஸ்களை 'த்தான் நம்புவார்கள்? (45:6) இது இறைவனின் கேள்வி! 80களில் தவ்ஹீதுப் பிரசாரம் வேகமாக வளர்ந்து 'விரலாட்டும் கலாச்சாரம்' பரவிய போது கோபம் கொண்ட கலீல் அஹ்மது கீரனூரி அல்முபீன் செய்தி ஆசிரியரின் 'மதரஸா உஸ்தாது' "ஹதீஸ்கள் மட்டும் போதும், இஜ்மாவும், கியாஸீம் தேவையில்லை என்று கூறும் ஆலீம்கள் அனைவரும் வரட்டும். அவர்கள் அனைவரிடமும் ஹதீஸ் புத்தகங்களைக் கொடுத்து தனித் தனியாக தொழும் முறைகளை எழுதிக் கொண்டு வாருங்கள் என்று சொல்வோம் அவர்கள் எழுதிக் கொண்டு வரும் பதில்களில் ஒற்றுமை இருக்கவே இருக்காது. வித்தியாசங்கள் இருக்கவே செய்யும். இக்குழப்பத்தை முறைப்படுத்து வதற்காகவே இஜ்மாவும், கியாஸீம் தேவை" என்று சவால் விட்டது நிறைய தவ்ஹீது சகோதரர் களுக்குத் தெரியாது. அவர்கள் ஒரு தரப்பு வாதத்தை மட்டுமே கேட்டவர்கள். இருதரப்பினரின் வாதங்களையும் முழுமை யாகக் கேட்ட எத்தனையோ சிந்தனை யுடையவர்கள் இன்றும் மத்ஹபுகளில் தான் இருக்கிறார்கள் என்பதை தவ்ஹீது சகோதரர்களுக்கு **'நினைவூட்ட** விரும்புகிறோம்')

கேள்வி :

ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வின் சின்னங்களை நீங்கள் ஹலாலாக்காதீர்கள் (5:2) அல்லாஹ்வின் சின்னங்கள் என்றால் என்ன? அவற்றை ஹலாலாக்கமல் இருப்பது எப்படி?

பதில் :

அல்லாஹ்வின் சின்னங்கள் என்றால் அல்லாஹ் 'குர்ஆனில்

மட்டும் விதித்த மார்க்க வழிபாட்டு முறைகள் என்பதே பொருள். இதனை இறைவன் விளக்கும் விதமாக (2:158)ல் நிச்சயமாக ஸஃபாவும், மார்வாவும் இறைவ னின் 'ஷ ஆயிர் களில், மார்க்க வழிபாட்டு முறை களில் உள்ளவை யாகும் என்று கூறுகிறார். ஸஃபா, மர்வாவைக் கடப்பது இறைவன் விதித்த ஹஜ் வழிபாட்டு முறைகளில் கிரியைகளில் ஒன்றாகும். எனவே ஷஆயிர் சின்னம் என்றால் இறைவன் விதித்த கிரியைகள் என்பதை நாம் விளங்கிக் கொள்கிறோம். மேலும் 5.2 வசனத்தை மொழிபெயர்த்துப் போட்டவர்கள் ஹலாலாக்காதீர்கள்' என்ற அரபி வார்த்தையை மட்டும் மொழிபெயர்க்காமல் ஏன் அப்படி யே அரபி வார்த்தையைப் போட வேண்டும்? அதையும் மொழி பெயர்த்து விட வேண்டியது தானே? மக்களைக் குழப்பும், உண்மையை மறைக்கும் முயற்சியே அது. இறைவன் மனிதர்கள் பேசிக்கொண் டிருக்கக் கூடிய, உயிருள்ள ஒரு மொழியில் தான் குர் ஆனை இறக்கி இருக்கிறார். அதன் வசனங்களை நாம் மொழிபெயர்த்து இறைவன் என்ன கூறுகிறார் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். எனவே தான் இறைவன் 41-44ல் அரபியோ, அது அல்லாதவரோ, நம்பிக்கை கொண்டவர்களுக்கு இது நேரான வழிகாட்டியும், அருமருந்தும் ஆகும். ஆயினும் நம்பிக்கையற்ற வார்களே இது குறித்து செவிட்டுத் தனத்தில் கேட்க முடியாமல், விளங்கிக் கொள்ள முடியாமல்) இருக்கிறார்கள் என்று கூறுகிறார். (பார்க்க, சிந்திக்க 41:44)

எனவே 5 2 வசனத்தின் மற்ற மொழி பெயர்ப்புக்களைப் படிப்பவர்கள் அதற்கு 'நம்பிக்கை கொண்டவர்களே! இறைவன் விதித்த மார்க்க வழிபாடுகளை நீங்கள் மீறாதீர்கள் என்பதே பொருள் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். இவ்விதமாக 'வார்த்தை களைப் பெரிது படுத்திக் காட்டி குர் ஆனின் 'கருத்துக்களை' விட்டு மக்களைத் திசைதிருப்பும் இஸ்லா மிய அறிஞர்களின் சூழ்ச்சி இனி அதிக நாட்கள் நீடிக்க முடியாது. கூறும்: சத்தியம் வந்தது. அசத்தியம் அழிந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்து போக வேண்டிய ஒன்றே யாகும். (17:81).

கேள்வி :

அல்லாஹ்வுடனும், அவரது தூதருடனும் போர் புரிந்து, பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரிபவர்களுக்கு தண்டனை இது தான் கொல்லப்படுதல் அல்லது தூக்கிலிடப்படுதல், அல்லது மாறுகால், மாறு கை வாங்கப்படுதல் அல்லது நாடு கடத்தப்படுதல்.

அல்லாஹ்வுடனும், அவரது தூதருடனும், போர் செய்வது என்றால் என்ன? மேற்கண்ட சட்டங்களில் எந்தக் குற்றங்களுக் கான தண்டனைகள் கூறப்படுகின்றன? ★

பதில் :-

அல்லாஹ்வுடனும், அவர் தூதருடனும் போர் செய்வது என்றால், இறைவன் அவர் தூதரிடம் தந்தனுப்பிய தூதுக்கு மாறு செய்து கொண்டிருப்பதே ஆகும். தூதர் உயிருடன் இருந்த போது அவருடன் போர் செய்வதும் இதில் அடக்க மாகும். மேலும் தூதர் கூறாத செய்திகளைச்கூறினார் என்பதும், தூதர் தந்த இறைத் தூதைவிட்டு மக்களைத் தடுப்பதும், அந்த இறைத்தூதைச் சிதைப்பதும், இறைவனுடனும், அவரின்தூதருடனும் போர் செய்வதே ஆகும்.

மேலும் இவர்களின் மொழி பெயர்ப்பில் குழப்பம் என்ற வார்த்தையைப் பயன் படுத்தி உள்ளனர். இது ஃபஸாது என்ற அரபி வார்த்தைக்கு உரிய ஒரே பொருள் மட்டும் அல்ல. ஃபஸாது என்ற அரபி வார்த்தைக்குக் கலகம், அக்கிரமமான குற்றங்கள் என்பதும் பொருள் ஆகும். குர் ஆனில் இறைவன் ஃபிர்அவ்னை ஃபஸாது (அவன் செய்தது குழப்பம் மட்டுமல்ல, கடும் அக்கிரமங்களும் கூட, அவை குர் ஆனில் விவரிக்கப் படு கின்றன.) செய்தவன் என்று கூறுகிறார். (28:4)

எனவே இவ்வசனம் அல்லாஹ்வுக்கும், அவர் தூதர்கள் மூலம் தந்த இறைச் செய்திகளுக்கும் மாறு செய்வதுடன், மேலும் அக்கிரமமான குற்றங்கள் செய்வோருக்கு உரிய தண்டனைகளை விவரிக்கிறது. அந்தக் காலத்தில் அக்கிரமம் என்று கருதப்பட்ட வைகளே ஹதீஸ்களில் கூறப்பட்டுள் ளன. அவை - ஆயுதம் தாங்கி வழிப்பறி, கொலை, கொள்ளை போன்றவையே ஆகும். அதைவிடக் கடுமையான அக்கிரமமான காரியங்களான வெடிகுண்டு வைத் துப் பொது மக்களைக் கொள்வது, மதக் கலவரம் ஏற்படுத்துவது, தொடர் கற்பழிப்புக்கள், கொலைகள் செய்வது போன்றவை இன்று செய்யப்பட்டு வருகின்றன. இது போன்ற மகா அக்கிரமமான காரியங்களுக்கும் உள்ள தண்டனை களில் ஒன்றுதான் மேற்கூறிய வசனத்தில் கூறப்படுகிறது: என்ப தைச் சிந்திப்பவர்கள் விளங்கிக் கொள்ள முடியும்.

உரைனா, உகைலா வம்சத் தினர் நபியின் ஆடு மேய்ப்பவரைக் கொன்ற போது, நபி, அவர்கள் அனைவரையும் பிடித்து ஆணியால் கண்களை நோண்டி, மாறுகால் மாறுகை வாங்கி, பாலை வனத்தில் அவர்களைத் தாகிக்க விட்டு மரணிக்கச் செய்தார் என்று ஒரு செய்தியை புகாரி பதிவு செய்திருக்கிறார். ஆங்கில மொழி பெயர்ப்பு (56/12)

இந்த அக்கிரமத்திற்குச் சப்பைக்கட்டு கட்டுவது போல் அவர்கள் அல்லாஹ்வுடனும்

தூதருடனும் போர் புரிந்தனர். எனவேதான் இத்தண்டனை அளிக்கப் பட்டது என்று ஒருவர் கூறியதாகவும் புகாரி அச்செய்தியின் கீழே எழுதியிருக்கிறார். இருப்பினும் இறைவன் 5:33 வசனத்தில் கூறப் படும் தண்டனைகளில் ஒன்றுதான் இஸ்லாமிய அரசால் கொடுக்கப் படும் என்று கூற அவை அனைத்தையும் சேர்த்து நபி செய்ததாக, இறைவனின் சட்டங் களைப் பொருட்படுத்தாது போல் மீறியது போல் நபியைப் பற்றி இந்த ஹதீஸ்கள் சித்தரிக்கின்றன. மேலும் கண்களை நோண்டியதற்கு என்ன நியாயம் கூறப் போகிறார்கள் இவர்கள்? அது குர்ஆனில் கூறப் படாத ஒன்றல்லவா? அதையுமா நபி செய்தார்கள்? மெய்யாகவே நபியை நேசிப்பவர்கள் இவ்வாறு கூறுவார் களா?

மேலும், ஹஜ் சம்பந்தப்பட்ட இவர்களின் முந்திய கேள்விகளில் ஒன்று 'உம்ரா' என்றால் என்ன என்பதாகும்.

இப்ராஹீமின் நிலை நாட்டப் பட்ட மார்க்கத்தில் உம்ரா என்றால் ஹஜ் காலம் அல்லாத மாதங்களில் கஃபாவைத் தரிசிப்பதே ஆகும் என்பதை ஹதீஸ்களின் துணையில் லாமலேயே நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

மேலும், இவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஹதீஸ்களின் அடிப்படையில் ஒரு சரியான, மாற்ற மில்லாத, ஒரே மாதிரியான உறுதியான பதில்களைத் தரவே முடியாது. அவர்கள் தங்களின் பதில்களைத் தரட்டும். நாங்கள் அதே ஹதீஸ்களின் தொகுப்பு அடிப் படையில் அதற்கு மாற்றமான விஷயங்கள் இருப்பதை எடுத்துக் காட்டுவோம். இன்ஷா அல்லாஹ்.

இறைவன் நீதமாகத் தீர்ப்பளிக்கிறார் அவரையன்றி அவர்கள் அழைக்கும் மற்ற இணையாளர்களால் எதையும் தீர்ப்பளிக்க முடியாது. நிச்சயமாக இறைவன் தான் பார்ப்பவராகவும் கேட்பவராகவும் இருக்கிறார். (40:20)

**பதில்கள் தொடரும்.**

## கண்ணியம் இறைவனுக்கே!

அறிந்து கொள்க! கண்ணியம் எல்லாம் இறைவனுக்கே உரியது (35:10) என்ற வசனத்தின் அடிப்படையில் இறைவனை அவன் என்று குறிப்பதைவிட அவர் என்று குறிப்பிடுவது சிறந்தது. எனவே இவ்விதழில் இறைவனைக் குறிப்பிடும் இடங்களில் 'அவன்' என்ற சொல்லுக்குப் பதில் 'அவர்' என்று குறிப்பிடப்படுகிறது:

# கேள்வி பதில்கள்

கேள்வி : நபிகள் நாயகம் சொன்ன ஹதீஸ்கள் மேலேயே சந்தேகப் படுகிறாயே, நீ எல்லாம் ஒரு முஸ்லிமா? உன் தகப்பனுக்குத் தான் உன் தாய் உன்னைப் பெற்றாள் என்பது உனக்குத் தெரியுமா? அது மட்டும் குருட்டு நம்பிக்கை இல்லையா? குர் ஆன் இதுதான் என்று நபியோ நபித்தோழர்களோ கூறாவிட்டால் உனக்கு எப்படித் தெரியும்?

பதில் : நேரிலும், கடிதங்களிலும் பலர் இந்தக் கேள்விகளை நம்மிடம் கேட்கிறார்கள். ஒவ்வொன்றாக இக்கேள்விகளைப் பார்ப்போம். முதலில் நாங்கள் முஹம்மத் நபி கூறாததை அவர் கூறியதாகச் சொல்லாதீர்கள் என்றே கூறுகிறோம். 4 ஹதீஸ்களுக்கும் முஹம்மத் நபிக்கும் : எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதையே எங்கள் இதழ்களில் நிரூபித்து வருகிறோம் அல்லாஹ்வின் தூதர் தன்' அங்கீகாரத்துடன் நமக்குத் தந்தது அல்குர் ஆன் மட்டுமே என்றே கூறுகிறோம்.

அடுத்து ஒரு மனிதன் தன் தகப்பனுக்குத் தான் பிறந்தான் என்பதை எப்படி நம்புகிறானோ அவ்வாறே நபி சொன்னதாகக் கருதப்படும் ஹதீஸ்களையும் நம்ப வேண்டும் என்று கூறுவதற்கு எங்கள் பதில் இது தான். இந்த ஒப்பீடு தவறானதாகும்.

ஒரு மனிதன் இன்னார்தான் தன் தகப்பன் என்று நம்புவது குருட்டு நம்பிக்கை இல்லை. தன் தாய்க்கும் தந்தைக்கும் ஊர் சாட்சியாக இருந்து கல்யாணம் செய்து வைத்ததை ஒரு மகன் அறிகிறான் அது சாட்சிகளுடன் பதிவு செய்யப் படுகிறது. மேலும் தன் தாயும் தந்தையும் ஒருவர் மீது ஒருவர் அன்புடன் இருப்பதைக் காண்கி றான். அவன் தந்தை தன் தாயிடம் எந்தச் சந்தேகமும் கொள்ளாமலி ருப்பதையும், தந்தை தன் மீது அன்புடன் இருப்பதையும் காண்கிறான். மேலும் தாய் தன் தகப்பனுக்கு உண்மையாக வாழ்வதையும் காண்கிறான். அவள் நடத்தையில் எந்தக் குறையும் காண்பதில்லை. இன்னும் இது அல்லாத எத்தனையோ ஆதாரங்களின் அடிப்படையில்தான்

ஒரு மகன் இன்னார்தான் தன் தகப்பன் என்று அறிந்து அதை நம்புகிறான். இவ்வாறில்லாமல் மேற்கூறிய விஷயங்களில் எல்லாம் குறைபாடுகள் இருக்குமானால் நிச்சயம் தன் தாய் கூறுவதை எந்த மகனும் நம்ப மாட்டான். தினம் தினம் ஒருவனை இவன்தான் உன் தகப்பன் என்று அடையாளம் காட்டினால் எந்த அறிவுள்ள, மானமுள்ள மகனாவது இதை நம்புவானா? ஏற்றுக் கொள்வானா?

இந்த அடிப்படையில் நாம் ஹதீஸ்களை யோசிப்போம் குர்ஆன் அல்லாத எந்த ஹதீஸ்களுக்கும் அல்லாஹ்வின் அங்கீகாரமோ தூதரின் அங்கீகாரமோ இல்லை குர்ஆனுடன் ஹதீஸ்களை அல்லாஹ்வோ அவரி தூதரோ இணைக்கவில்லை. நபிகளின் மரணத்திற்குப்பின் சுமார் 200 ஆண்டுகள் கழித்து சில மனிதர்களே இவ்வாறு செய்தார்கள். மேலும் இவை ஒன்றுக்கொன்று முரணானவவையாகவும், குர்ஆனுக்கு மாறானவையாகவும் உள்ளன. அறிவுக்குப் பொருந்தாத கற்கால நடைமுறைகளைக் கொண்டவையாக உள்ளன. ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டத்திற்கு இது தான் சரியான ஹதீஸ். இது தவறான ஹதீஸ் என்று புகுந்து விளையாடுகிறார்கள் நேற்று சரியான ஹதீஸ், இன்று தவறென்றும், இன்று சரியென்று கூறப்படும் ஹதீஸ்கள் நேற்று தவறென்றும் நமக்கு மாறி மாறிக் கூறப்படுகின்றன. புதிது புதிதாக ஹதீஸ்கள் கண்டு பிடித்து எடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வரும் தான் நம்பும் அறிஞர்களையே சார்ந்திருக்க, குருட்டுத் தனமாக நம்ப, வேண்டி இருக்கிறது. குர்ஆனைப் போல் ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்டதாக இல்லை. இதன் பின்னரும் ஹதீஸ்கள் நபி கூறியதென்று நாம் எப்படி உறுதியாக நம்ப முடியும்?

மேலும் இவர்கள் தவறாக எண்ணுவது போல் முஹம்மத் நபி குர்ஆனுக்கு ஆதாரமாக இல்லை . குர்ஆன் தான் முஹம்மத் நபி என்பதற்கும், தூதர் என்பதற்கும் ஆதாரமாக இருக்கிறது. (பார்க் 29:50-52) குர் ஆனுக்கு இறைவன் தானே ஆதாரமாக, சாட்சியாக இருக்கிறார். வானம் பூமி ஆகியவையும் ஆதாரமாக உள்ளது. சத்தியம் ஆதாரமாக உள்ளது. மேலும் "19" என்ற அற்புதக்கணிதக் கட்டமைப்பு மூலம் எந்த மனிதத் தேவையுமின்றி குர்ஆன் இறைவேதம் தான் என்று மெய்ப்பிக்கப் பட்டும் உள்ளது. இறைவன் மனிதர்களை விட்டும் தேவையற்றவர்

# வாசகர்கள் கடிதம்

★

அஸ்ஸலாமு அலைக்கும்.

தங்களது 'புதிய நினை வூட்டல்' இதழ்களை நண்பர் மூலம் பெற்று படித்து வருகிறேன். எல்லாம் சிறப்பாக உள்ளன. 'அல்ஹம்து லில்லாஹ்'

இருப்பு (தஷஹ்ஹுது) நிலையில் ஷிர்க் இல்லாது, ஸலவாத்து இல்லாமல் - என்ன ஓத வேண்டும். முதலில், அடுத்த இதழில் தொழுகை - அதில் ஓத வேண்டியவை பற்றி எழுதுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன்.

அல்ஹம்துலில்லாஹ்

(இந்த இதழ் முதல் தொழுகை பற்றி விபரங்கள் இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து வெளியிடப்படும்)

எஸ். சிக்கந்தர், சென்னை -87

★

அன்புடையீர்,

அஸ்ஸலாமு அலைக்கும்.

"புதிய நினைவூட்டல்" தொடர்ந்து கிடைத்து வருகின்றது. மிக்க நன்றி. ஆர்வத்துடன் படித்து வருகின்றேன்.

**தலையங்கம் பற்றி** : சூரிய தேதியை கணக்கிடுவது போல் சந்திர தேதியையும் கணக்கிட்டு முன்கூட்டியே திட்டவட்டமாக அறிவிக்க இயலும். அறிவிக்க வேண்டும் என்ற கருத்து மிகவும் சரியானதே. திருக்குர்ஆனன் அடிப்படையில் தராவிஹ் தொழுகை கிடையாது. நோன் பின் முடிவாக கொண்டாடி வரும் பெருநாள் தொழுகை என்று ஜமாத்தாக கூடி தொழும் சிறப்புத் தொழுகை என்பதும் கிடையாது. திருக்குர் ஆனை மெய்ப்பிக்கும் தூதர் டாக்டர் ரஷாத் கலீபா அவர்கள்தான்.

**ரமலான்** : சந்திர மாதம் பற்றியும், இஸ்லாமிய நாள் துவக்கம் பற்றியும், கணக்கிடும் முறை பற்றியும் விளக்கி இருப்பது ஆராய்ந்து - பின்பற்ற வேண்டிய ஒன்றே ஆகும். பிறையைக் கண்ணால் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பது பற்றியும் விளக்கி இருந்தது ஏற்புடையதே!

நபி யார்? தூதர் யார்? என்பது பற்றி திருக்குர் ஆன் அடிப்படையில் தெளிவாக விளக்கியிருந்தது. 'புதிய நினைவூட்டல்' தான். எந்த முஸ்லிம் மாத இதழிலும் இந்த அளவு தெளிவாக எவரும் விளக்கியதாக தெரியவில்லை .

இறுதி நபி முஹம்மது நபிதான். ஆனால் இவருக்கு பின்னரும் தூதர்கள் வருவார்கள் என்பதை விளக்கி இருந்தது ஏற்கத்தக்கதுதான். அஹமதியா ஜமாத்தை அசைக்க இயலாமல் தவிக்கும் பலருக்கு இந்த விபரங்கள் நல்ல வழிகாட்டி என்பதில் சந்தேகமில்லை.

ஹதீஸ்களின் அடிப்படையில்தானே அஹமதிகள் தங்கள் கருத்தை ஆணித்தரமாக சொல்கிறார்கள். இவர்களும் அதனை எதிர்கொள்ள இயலாமல் ஏதேதோ சமாளிக்க முயல்கின்றார்கள். தங்கள் நம்பும் ஹதீஸ்களே தங்களை காப்பாற்றாத நிலையை உணர்ந்து வருவதையும் காண முடிகிறது.

எஸ்.ஜி. எஸ். சுல்தான்ஜி,
சேலம்-636008

# அல்குர்ஆன் ஐ வேற்றுமொழியில் மொழிபெயர்த்த முதல் அரபி

அகிலங்களின் இரட்சகரான இறைவனிடமிருந்து மனித குலத்திற்கு இறக்கப்பட்ட குர்ஆன் ஐ 1400 வருடங்களாக அரபி அல்லாத வேற்று நாட்டவரே மொழிபெயர்த்து வந்துள்ளனர். ஆனால் 1974 ஆம் ஆண்டு முதன் முதலாக அரபியை தாய் மொழியாகக் கொண்ட (எகிப்தில் பிறந்து வளர்ந்தவர்) Dr. **ரஷாத் கலீபா** அவர்கள், குர்ஆனை இறைவனின் நாட்டப்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இதன் மூலம் உலகிற்கு குர் ஆனின் மிகச் சரியான ஆங்கில மொழிபெயர்ப்பு கிடைத்தது இன்ஷா அல்லாஹ் நம் இதழில் இந்த ஆங்கில மொழி பெயர்ப்பும் அதன்தமிழ் ஆக்கமும் தொடர்ந்து வெளிவரும்.

**வாசகர்கள் கவனத்திற்கு**

அன்புள்ள வாசகர்களே, புதிய நினைவூட்டல் என்ற இந்த மாத இதழ் இலாப நோக்கின்றி இறை வழியில் மனிதர்களுக்கு, சேவை செய்வதற்காக மட்டுமே ஆரம்பித்து நடத்தப்படுகிறது. இதற்கு நீங்கள் சந்தா செலுத்தி வாங்கி பயனடையுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்களின் பெயர்களுக்கும் சந்தா செலுத்தி பயனடையச் செய்யுங்கள்

**கேள்வி-பதில் பகுதி**

அடுத்த இதழில் கேள்வி பதில் பகுதி தொடங்குகிறது. வாசகர்களின் கேள்விகளுக்கு அல்குர்-ஆனின் ஒளியில் பதில்கள் தரப்படும். இறைவனின் நாட்டப்படி.

**கேள்விகளும், விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.**

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கிணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங்களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக்குள்ளேயே கொண்டதாக இருக்கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணிதல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662